138

வக்கீல்

பொதுமக்களுக்கான தமிழ் சட்டப் பத்திரிகை

JUL 1953

ஜுன் 1953

பொது மக்களுக்குத் தேவையான புதிய சட்டங்களையும் கோர்ட்டு தீர்ப்புகளையும் மற்றும் பல சட்ட விஷயங்களையும் எளிய தமிழ் நடையில் விளக்கும் மாத வெளியீடு.

அணா 6



ரெஸாக்...

THE VAKIL * TAMIL LAW MAGAZINE

"வக்கீல்"

பொது மக்களுக்கான
உயர்தர தமிழ் சட்டப் பத்திரிகை
ஆசிரியர் கமிட்டி

ஸ்ரீ T. சம்பத், B.A., B.L.,
„ G. நாகராஜ பத்தர், B.A., B.L.,
„ V. தியாகராஜன், B.A., B.L.,
„ A. பார்த்தசாரதி நாயுடு, B.A., B.L.,
„ S. சாம்பசிவய்யர், B.A., B.L.,
„ T. S. வெங்கடராமன், B.A., B.L.,
„ R. கிருஷ்ணமாச்சாரி, B.A., B.L.,
„ R. கோபாலசாமி, B.A., B.L.,
„ C. R. வீரராகவன், M.A., B.L.,
„ R. கிருஷ்ணமூர்த்தி, B.A., B.L.,
„ P. சுந்தரேசய்யர் B.A., B.L.,
„ V. S. விஜயராகவாச்சாரி B.A., B.L.,
[ஆசிரியர்]

"வக்கீல்" சந்தா விபரம்

தனிப் பிரதி அணா 6. வருட சந்தா ரூ. 5 விசேஷ வருட சந்தா ரூ. 9. ஷை வெளிநாடு ரூ. 10. ஆயுள் சந்தா ரூ. 100.

சந்தாதாரர்கள் கவனிக்கவும்:— வருஷ சந்தாதாரர்களுக்கு 12 மாத இதழ்களும், அந்த வருடத்திய பொருள் அட்டவணையும் அனுப்பப்படும். (பொருள் அட்டவணை தேவையில்லாதவர்கள் அணா 8 கழித்துக் கொண்டு பாக்கி ரூ. 4-8-0 அனுப்பினால் போதும்.) விசேஷ வருட சந்தாதாரர்களுக்கு மேற்கண்டவை அனுப்புவதுடன் அவ்வருடத்திற்குள் "வக்கீல்" சப்ளிமெண்டுகளாக பிரசுரமாகும் 3 சட்ட புத்தகங்களும் அனுப்பப்படும். ஆயுள் சந்தாதாரர்கள் இனி சந்தா கட்டவேண்டியதில்லை. அவர்களுக்கு மேற்கண்டவை எல்லாம் அனுப்பப்பட்டுவரும்.

சந்தாத் தொகையை மணியார்டர் மூலம் அனுப்ப:—

மானேஜர் "வக்கீல்" காரியாலயம்
தபால் பெட்டி 26, கும்பகோணம்
(தென் இந்தியா)
என்ற விலாசத்துக்கு அனுப்பவும்.

"வக்கீல்"
(விளம்பர விகிதம்)

ஒரு முறை பிரசுரம் செய்ய

பின் அட்டை முழுப் பக்கம் (இரண்டு கலர்)	ரூ. 100
உள் அட்டை முழுப் பக்கம்	ரூ. 80
உள் பக்கம் முழுப் பக்கம்	ரூ. 60
ஷை ... அரைப் பக்கம்	ரூ. 35
ஷை ... கால் பக்கம்	ரூ. 20
ஒரு காலம் - அங்குலம்	ரூ. 5

(தொடர்ச்சியாக 12 இதழ்களில் விளம்பரம் செய்ய 10% குறைக்கப்படும்.)

ஏகரீக நூதன் பார்டர்களில்
கண்ணைக் கவரும்
மனோகரமான வேலைப்பாடுள்ள

பட்டு ஜவுளி தினுசுகள்

குறைந்த விலையில் கியாரண்டியுடன்
—கிடைக்குமிடம்—

ராணி ரெங்கய்யர் சன்ஸ்

கைத்தறி பட்டு ஜவுளி உற்பத்தியாளர்கள்
கொருடலாய்த் தெரு,
கும்பகோணம்.

பிராஞ்சு:—
20, லக்ஷ்மிபுரம் 2-வது தெரு,
மதுரை.

பெங்களூர்
காஞ்சீபுரம்
கும்பகோணம்
பட்டுச் சேலைகள்
நூதன பார்டரில்
ஏராளமாக
ஸ்டாக் செய்திருக்கிறோம்.

ரெங்கமூர்த்தி கம்பெனி

கொருடலாயத் தெரு,
கும்பகோணம்.

பிராஞ்சுகள்:—
காரைக்குடி, தேவகோட்டை.

V.S. & Sons

SWEETS

குணத்திலும்
மணத்திலும்
நிகரற்றது

வி. எஸ். & ஸன்ஸ்

பெப்பர்மெண்டுகள்

*

— தயாரிப்பவர்கள் —

தென் இந்திய பெப்பர்மெண்டு தொழிற்சாலை,
கும்பகோணம்.

(Estd. 1925)

கல்யாண காலங்களுக்கு
பட்டு & நூல் ஜவுளிகள்
கிடைக்குமிடம்
ருக்மணி ஸில்க் எம்போரியம்
பெரிய தெரு, :: கும்பகோணம்

ஹெட் ஆபீஸ் :
PHONE 84188
மைலாப்பூர் ராதா ஸில்க் எம்போரியம்
மதராஸ்.

"சமரன்"
மாதமிருமுறை தமிழ்ப் பத்திரிகை
ஆங்கிலமீ 1, 15 தேதிகளில் பிரசுரம் ஆகும்
ஆசிரியர்:- கும்பகோணம் நகர சபை உறுப்பினர்
A. S. M. இஸ்மத் பாஷா
சந்தா விபரம்
1 வருடம் ரூ. 3-0-0 ½ வருடம் ரூ. 1-8-0
தனிப்பிரதி ரூ. 0-2-0
விளம்பர விபரங்களுக்கு எழுதி தெரிந்து கொள்ளலாம். டிப்பாஸிட் கட்டக்கூடிய ஏஜண்டுகள் எங்கும் தேவை.
குறிக்கோள்
முனிசிபல், பஞ்சாயத்து போர்டு, லோகல் போர்டு நிர்வாக ஊழல்களை அம்பலமாக்கி சீர் திருத்த கருத்துக்களை வெளியிடுதல்.
விபரங்களுக்கு:-
ஆசிரியர் ○ "சமரன்"
146, திக்காம்பாளயத்தெரு, கும்பகோணம்.

கல்வி இலவசம்
சர்க்கார் 8-ம் வகுப்பு (E.S.L.C.)க்கு இலவசமாக தபால் மூலம் வீட்டிலே பாடம் கற்பித்து 1954 ஏப்ரலில் சர்க்கார் பரீட்சைக்கு அனுப்புகிறோம். தமிழ் படிக்கத் தெரிந்த ஆண் பெண் சேர்ந்து படித்தால் சர்க்கார் உத்தியோகம் பெறலாம். விவரங்களுக்கு 2 அணா ஸ்டாம்புடன் எழுதவும்.
மானேஜர்
கலைமகள் வித்யாலயம்,
கொடிவயல், சுப்பிரமனியபுரம் P.O.
(VIA) ஆயிங்குடி, தஞ்சை Dt.

வக்கீல்

பொருள் அடக்கம்

மலர் 5 — ஜூன் 1953 — இதழ் 6

மது விலக்கும் பணநெருக்கடியும் 3
தஞ்சையின் பொறுப்பு 3
புதிய சட்டங்கள் 5
வரிகள் சென்னைப் புகையிலை விற்பனை வரி—பதிவுச் சட்ட விதிகள் 1953 7
பொது விற்பனை வரி விதிகள் திருத்தம் 10
1953-54 வருமான வரி 12
சர்க்கார் அறிக்கைகள் 13
வழக்கும் - தீர்ப்பும்
*கிரிமினல் கேசுகளில் முதல் விசாரணையில் எக்காரணத்தைக் கொண்டாவது பொய் வாக்கு மூலம் கொடுத்து விட்ட ஒருவர் பின்பு கோர்ட்டில் முடிவான விசாரணையின்போது உண்மையை சொல்லி விட்டால் அச்சாக்ஷிபேரில்நடவடிக்கைகள் எற்படுமா? 15
*உள்ளூர் வாசிகள் சிலர் சேர்ந்து ஒரு சங்கம் அமைத்துக்கொண்டு ஒரு சொத்து வாங்கி, அதன் வருமானத்தைக்கொண்டு அங்கிருக்கும் விநாயகர் கோயில் மார்கழி மாதம் திருவாதிரை உத்சவம் செய்து வந்தனர். அச் சொத்து அக்கோயிலின் 'கட்டளை' சொத்தென்றும், இந்துமத தர்ம பரிபாலனச் சட்டப்படி அதற்கு வரி கொடுக்கவேண்டுமென்றும், 'எண்டௌமெண்ட் போர்டார்' உத்தரவிட்டனர். அது சரியா? 16
*இரண்டு மனைவிகளுக்கும் ஒத்துக் கொள்ளவில்லை. இரண்டாவது மனைவி தனியே வசித்துக் கணவனிடம் ஜீவனாம்சம் அடையதாவா. அவளுக்கு அவ்வுரிமை உண்டா? 17
*சட்ட விரோதமாக வசூல் செய்யப்பட்ட விற்பனை வரித் தொகையைச் சர்க்காரிடமிருந்து திருப்பி வாங்க தாவா செய்யலாமா? காலாவதி என்ன? 18
*இது சுத்தக் கிரயமா அல்லது அடமானமா? சென்னைஹைகோர்ட் தீர்ப்பு 19
சென்னை கிராமப் பஞ்சாயத்து சட்டம் 20
கேள்வியும் – பதிலும் 24

வக்கீல்

வாழிய செந்தமிழ்! வாழ்க நற்றமிழர்!



187723

மலர் 5 | ஜூன் 1953 | இதழ் 6

மதுவிலக்கும் பண நெருக்கடியும்.

அரசாங்கத்தை நடத்தப் பணம் வேண்டும். மக்களுக்கு நன்மை செய்வது அப்புறமாகட்டும். அரசாங்க உத்தியோகஸ்தர்களுக்கு, அதுவும் அதிக வேலையில்லாமல் அளவுக்கு மிஞ்சிய சம்பளத்தில் நியமிக்கப்படும் நமது உயர்தர அதிகாரிகளுக்கு, மாதம் முதல் தேதியிலேயே சம்பளம் பட்டுவாடா செய்யப்பட வேண்டும். இவ்விதம் அவசியமில்லாமல் அதிகச் சம்பளம் வாங்கும் உத்தியோகஸ்தர்களுடைய எண்ணிக்கையானது, முன்பு இருந்தது போல் இப்பொழுது ஏழு எட்டு மடங்கு அதிகமாக இருக்கிறது. மக்களிடம் பணம் வசூல் செய்து, சில உத்தியோகஸ்தர்களிடையே அதைப் பங்கீடு செய்து கொடுப்பதுதான் நமது 'ஜனநாயகம்' போல் தோன்றுகிறது! மதுவிலக்கு ஏற்படுவதற்கு முன்பு இந்த ராஜ்யத்தின் வருமானத்தில் பெரும் பகுதியானது கலால் வருமானமே. மதுவிலக்குச் சட்டம் வந்தவுடன் சர்க்காருக்கு இவ்வருமானம் நின்று விட்டது. அத்துடன் இல்லை. மது விலக்குச் சட்டத்தை அமுல் நடத்த, அதாவது திருட்டுத்தனமாக எவரும் குடிக்காமல் பார்த்துக் கொள்ளச் சர்க்காருக்கு ஏராளமான செலவு ஆகின்றது. ஆனால் மது அருந்துவது (குடி) நிற்கவில்லை. உயர்தர அதிகாரிகள் பெயருக்குப் பர்மிட் என்று வாங்கிக்கொண்டு நன்றாக அயல் நாட்டு மதுவை அருந்துகின்றனரென்றால், பாமர மக்கள் சளைத்து விடுவார்களா? எங்கும் சாராயம் காய்ச்சப் படுகிறது; கள் உற்பத்தி செய்யப்படுகிறது. முன்பு பகிரங்கமாக, ஆனால் கொஞ்சமாகக் குடித்தவர்கள் எல்லாம் இப்போது அதிகமாக, ஆனால் மறைவாகக் குடித்துத் தான் வருகின்றனர். சர்க்கார் தம் வருமானத்தை இழந்ததுதான் மிச்சம். மதுவிலக்குச் சட்டத்தை ரத்துச்செய்து விட்டு, குடிப்பவர்மீது அமிதமான ஒரு வரியைப் போடுவது தான் குடியை ஒழிக்காவிட்டாலும், அதைக் குறைப்பதற்கான நேர்மையான வழியாகும். சர்க்காருக்குப் பணநெருக்கடியும் கொஞ்சம் மறையும்.

தஞ்சையின் பொறுப்பு.

சென்னை ராஜ்யத்தில் இப்போது உபரி நெல் விளையும் ஜில்லாக்கள் ஐந்து தான். இவற்றில் நான்கு ஜில்லாக்கள் ஆந்திர ராஜ்யத்தில் போய்விடும். தமிழ் நாட்டில் தஞ்சை ஒன்று தான் உபரி நெல் விளையும் ஜில்லாவாக ஏங்கி நிற்கும். அதாவது, தமிழ் நாடு பூராவுக்கும் அரிசி சப்ளை

செய்யும் பொறுப்பு தஞ்சையின் மீது தான் சுமத்தப்படும் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் தஞ்சையில் அதிக நெல் விளைவதற்கான உதவியைச் சென்னை சர்க்கார் செய்து வரவில்லை. சென்னை முதல் அமைச்சருக்குப் பிடிக்காத பல இனத்தினர்களில் தஞ்சை நிலச்சுவான் தார் குழாமும் ஒன்றாகும். தஞ்சை ஜில்லாவைக் கம்யூனிஸ்டுக் கட்சிக்கும் காங்கிரஸ் கட்சிக்கும் பொதுவான ஒரு போர்க்களமாகச் செய்த பொறுப்பு ராஜாஜியைச் சேர்ந்ததே. தஞ்சையின் நெல்லும் அரிசியும் மற்ற ஜில்லாக்களுக்கு வேண்டுமானால் அது தீவிர 'லெவிக் கொள்முதல் செய்வதால் மட்டும் கிடைத்து விடாது; தஞ்சை நிலச்சுவான் தார்களை மட்டம் தட்டுவதால் மட்டில் கிடைத்துவிடாது; நெல் சாகுபடி செய்வதைப்பற்றிச் சென்னையிலிருக்கும் அதிகாரிகள் ஆளுக்கொரு அறிக்கை வெளியிட்டுக் கொண்டிருப்பதால் மட்டில் கிடைத்து விடாது. விவசாய இலாகா அதிகாரிகள் சர்க்கார் செலவில் அடிக்கடி தஞ்சை ஜில்லாவில் உல்லாசப் பிரயாணம் செய்வதால் மட்டில் அதிகமான நெல் கிடைத்து விடாது.

தஞ்சை ஜில்லா நிலச் சுவான்தார்கள் எல்லாம் ஏதோ சோம்பேறிக் கூட்டமென்றோ, அவர்கள் எல்லாம் உல்லாச வாழ்க்கை வாழ்பவர்களென்றோ அரசாங்கத்தினர் நினைத்துக் கொண்டிருந்தால், அது அறியாமையின் அடையாளமாகும்.

தஞ்சை நிலச்சுவான்தார்களின் பெரும்பான்மையோர் கொஞ்சம் கொஞ்சம் நிலம் வைத்துக்கொண்டு சொந்தத்தில், ஒரு வகை இல்லா விட்டால் ஒரு வகையில், சரீரத்தைக் கொண்டு உழைப்பவர்கள் தான். அவர்களும் பாட்டாளி மக்கள் தான். அவர்கள் குத்தகைதார்களிடமோ, சாகுபடிதார்களிடமோ, பண்ணையாட்களிடமோ சண்டை செய்பவர்களல்ல. அவ்வித மனப்பான்மையுள்ள நிலச்சுவான்தார்களுக்கு விவசாயத்தில் உற்சாகமூட்ட வேண்டும்; அவர்களுக்குப் பணத்தாலும், எரு முதலிய பண்டங்களாலும் சர்க்கார் உதவி புரிய வேண்டும். அவர்களுடைய ஒவ்வொரு வயலையும் விவசாய இலாகா சிப்பந்திகள் பார்வையிட வேண்டும்; சரியான சமயத்தில் ஆலோசனைகள் சொல்ல வேண்டும். தஞ்சை வயல்கள் செப்பனிடப்பட வேண்டிய காலங்களில் விவசாய இலாகா உயர்தர அதிகாரிகள் நீலகிரியில் வாசம் செய்துவிட்டு, நடவு நட்ட பிறகு அதற்கு முன் செய்திருக்க வேண்டிய காரியங்களை எடுத்துக் காண்பிப்பதும், அறுவடை நடக்கும் போது எருப் போடுவதைப் பற்றிப் பிரசங்கம் செய்வதும் போதாது. விவசாய இலாகா மூன்று நான்கு மாதங்கள் தஞ்சை ஜில்லாவில் தலைமைக் காரியாலயத்தை வைத்துக் கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் தஞ்சையின் நெல் உற்பத்தி இருமடங்காகும். தமிழ் நாட்டுக்கு இது போதும்.

எங்கும் புகழ் பெற்ற அற்புத சஞ்சீவி

"ஜெயராம்" காயசுத்தி லேகியம் (Regd. No. 138512)

இரண்டே வேளையில் ஆச்சரியமான குணம் தெரியும்.

ஆயிரக்கணக்கான மக்களால் தினமும் உபயோகிக்கப்படுவது.

தலைவலி, மயக்கம், வாந்தி, கழுத்துப் பிடரிவலி, நெஞ்சுவலி, முதுகுவலி, புளித்தேப்பம், நெஞ்செரிச்சல், அஜீரணம், வயற்றுப்பிசம், வயற்றுவலி, இடுப்புவலி, கைகால் வலி, கிருமிகளின் உபாதை, நாள்பட்ட மலச்சிக்கல், இருமல், நெரிக்கட்டிய சுரம், மூலநோய் முதலியவைகளை நீக்கி பசியைக் கொடுத்து உடலுக்குப் புதிய சக்தியை அளிக்கும்

உபயோகிக்கும் விபரம் மருந்துடன் வரும்

1 சேர் ரூ. 4-8-0 ½ சேர் ரூ. 2-4-0

வி. பி. பி. செலவு தனி

உங்கள் வியாதி எதுவாயினும் ஜெயராம் வைத்தியசாலைக்கு வாருங்கள்

தயாரிக்குமிடம்:— ஜெயராம் வைத்தியசாலை, 28, காசிவிஸ்வநாதர் கீழவீதி, கும்பகோணம்.

புதிய சட்டங்கள்

சுருக்கியும்-வரிசையாகவும்

1953-ஆம் வருடத்திய (மத்திய) சட்டங்கள்

[இந்திய யூனியன் பார்லிமெண்டால் நிறைவேற்றப் பட்டவை. முதலில் இருக்கும் எண், அவ்வருடத்திய எத்தனையாவது சட்டம் என்பதைக் குறிக்கும். பிராக்கெட்டுக்குள் இருப்பது ஜனாதிபதி அவர்களால் அச்சட்டத்திற்கு அங்கீகாரம் அளிக்கப்பட்ட தேதி. இதற்கு முன் உள்ள சட்டங்கள் "வக்கீல்" முந்திய இதழ்களில் வரிசையாகச் சொல்லப் பட்டன. வரிசையில் விட்டுப்போன சட்டங்களும், பிரசுரமானவுடன் "வக்கீல்" பிந்திய இதழ்களில் விளக்கப்படும்.]

11. இந்தியாவைவிட்டு வெளியேறியவர்களின் சொத்து நிர்வாகச் சட்டத் திருத்தம். Administration of Evacuee Property Amendment Act 1953 (9-4-1953)

13. அரசாங்கப் பொதுச் செலவு (3 செ.) சட்டம். 1953 Appropriation No. 3 Act 1953 (23-4-1953) 1953—54 நிதி வருடத்தில் முன் அனுமதிக்கப்பட்ட செலவுகளையும் சேர்த்து அரசாங்கச் செலவுக்காக இந்தியப் பொது நிதியிலிருந்து ரூ. 24,27,49,03,000 செலவு செய்யலாமென்று மத்திய சர்க்காருக்கு அனுமதி கொடுக்கும் சட்டம்.

14. நிதிச்சட்டம் (1953) Finance Act 1953. ஒவ்வொரு வருடமும் புதிய வரிகள் போடவும், பழைய வரிவிகிதங்களை மாற்றவும், 'நிதிச்சட்டம்' என்று ஒரு சட்டம் இயற்றப்பட்டு வருகிறது. 1953—54 நிதி வருடத்தில் இச்சட்டத்தில் கண்டபடி வரி முதலியவை வசூல் செய்யப்படும். வரி விதிக்கும் வெவ்வேறு சட்ட வாசகங்களைத் திருத்தி அமைக்கும் விதத்தில் இச்சட்டம் இருக்கும். 1953-ஆம் வருடத்திய நிதிச் சட்டத்தால் கீழேகண்ட சட்டங்களில் மாறுதல்கள் செய்யப்பட்டிருக்கின்றன. அவையாவன:—(1) 1922ஆம் வருடத்திய இந்திய வருமான வரிச் சட்டம் (இன்கம்டாக்ஸ் ஆக்ட்) (2) 1934-ஆம் வருடத்திய இந்தியத் தீர்வைப் பட்டியல் சட்டம். (டாரிப் ஆக்ட்) (3) 1944-ஆம் வருடத்திய மத்திய அரசாங்கச் சுங்கவரி—உப்புச் சட்டம் Central Excise and Salt Act. (4) 1898-ஆம் வருடத்திய இந்தியத் தபாலாபீஸ் சட்டம்.

வருமானவரி (இன்கம்டாக்ஸ்) சம்பந்தப் பட்ட வரை, 1953—54 நிதி வருடத்தில் ரூ. 4200க்குமேல் வருட வருமானமுள்ளவர்களுக்குப், பிரிபடாத இந்துக் குடும்பமாக இருந்தால் வருஷ வருமானம் ரூ. 8400க்குமேல் இருப்பவர்களுக்கும்தான் வருமான வரி விதிக்கப்படும். இச்சட்டத்தில் புதிய வீடுகள் பற்றியும், புத்தகங்கள் முதலியவற்றிலுள்ள ஆசிரியர் பாத்தியங்களைப் பற்றியும் இன்னும் சில விஷயங்களிலும் வரி கொடுப்பவருக்குச் சில சலுகைகள் காண்பிக்கப்பட்டிருக்கின்றன. இந்தியாவிலும் வெளி நாட்டிலும் இரண்டு இடங்களிலும் வருமான வரி கொடுப்பவர்களுக்கு ஏற்படும் கஷ்டத்தைக் குறைக்க ஒரு ஷரத்து சேர்க்கப் பட்டிருக்கிறது. சில ஏற்றுமதி - இறக்குமதிச் சரக்குகளுக்குத் தீர்வை அதிகமாக்கப்பட்டிருக்கிறது. புக்போஸ்டுகளுக்கு முதல் 5 தோலாவுக்கு 9 தம்படியாக இருந்தது 1 அணாவாகவும், அதிகப்படியான ஒவ்வொரு 2½ தோலாவுக்கும் காலணாவாக இருந்தது அரை அணாவாகவும் உயர்த்தப்பட்டிருக்கிறது. பார்சல்களுக்கு அணா 6 ஆக இருந்தது. அணா 8 ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது.

15. மத்திய அரசாங்கச் சுங்க வரி—உப்புச் சட்டத் திருத்தம். Central Excise and Salt Amendment Act 1953. தேயிலைக்குச் சுங்கவரி விகிதம் குறிப்பிடப்பட்டிருக்கிறது. பொட்டணம் கட்டப்படாத தேயிலைக்கு பவுண்டு ஒன்றுக்கு ஒரு அணாவும், 60 பவுண்டுக்குட்பட்டு பொட்டணமாகக் கட்டப்படும் தேயிலைக்கு மேற்கண்ட ஒரு அணா தவிர அதிகமாக பவுண்டு ஒன்றுக்கு அணா மூன்று வீதமும் சுங்கவரி விதிக்கப் பட்டிருக்கிறது.

தஞ்சை சாகுபடிதார் பண்ணையாள் பாதுகாப்புச் சட்டம்

மறுபதிப்பு வெளியாகிவிட்டது

சட்ட சபையால் இயற்றப்பட்ட புதிய சட்டம்-விதிகள்-நமூனாக்கள்-குத்தகைப் பத்திர நமூனா - வார சாகுபடிப் பத்திர நமூனா உள்பட எளிய தமிழ் நடையில் மொழி பெயர்க்கப் பட்டிருக்கிறது

விலை அணா 6

தபால் சார்ஜ் பிரத்தியேகம்.

தேவையான பிரதிகளுக்கு கீழேகண்ட விலாசத்திற்கு மணியார்டர் செய்யவும். ஏஜண்டுகள் கமிஷன் நீக்கி முன் பணம் அனுப்பவும்.

மானேஜர் — "வக்கீல்"

தமிழ் சட்டப் பத்திரிகை

தபால் பெட்டி 26, கும்பகோணம் (S. I.)

1953 ஆம் வருடத்திய (சென்னை) சட்டங்கள்

[சென்னைச் சட்ட மன்றத்தில் நிறைவேற்றப்பட்டவை. சட்டம் சென்னை சர்க்கார் கெஜட்டில் பிரசுரம் செய்யப்பட்ட தேதி பிராக்கெட்டில் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதற்கு முன் உள்ள சட்டங்கள் "வக்கீல்" முந்திய இதழ்களில் வரிசையாகச் சொல்லப்பட்டிருக்கின்றன.]

6. சென்னை தமாஷா வரிச் சட்டத் திருத்தம். Madras Entertainments Tax Amendment Act, 1953. தமாஷா வரிச் சட்டத்தின் செக்ஷன் 13-இன்படி சென்னைச் சர்க்கார் வசூல் செய்யும் தமாஷா வரித் தொகையில் 10 சத விகிதத் தொகையை சர்க்காரே வைத்துக்கொண்டு, பாக்கி 90 சத விகிதத் தொகையைத் தமாஷா எந்த இடத்தில் நடக்கிறதோ அந்த இடத்திற்கான ஸ்தல ஸ்தாபனத்திற்கு, (அதாவது சென்னைக் கார்பொரேஷன், அல்லது மற்ற முனிசிபாலிட்டிகள், அல்லது பஞ்சாயத்து, அல்லது பஞ்சாயத்து இல்லாத இடங்களில் ஜில்லா போர்டுகளுக்குக்)கொடுத்து விடவேண்டுமென்றும்; ராஜ்ய சர்க்கார் இஷ்டப்பட்டால் மேபடி பாக்கி 90 சத விகிதத் தொகையை அந்த ஸ்தல ஸ்தாபனத்திற்கும் பக்கத்திலுள்ள வேறு ஸ்தல ஸ்தாபனத்திற்கும் பங்கு வீதமாகப் பிரித்துக் கொடுத்து விடலாமென்றும் இருக்கிறது. அந்த ஷரத்தில் இப்போது ஒரு புதிய ஷரத்து சேர்க்கப்பட்டிருக்கிறது. அதாவது, மேற்கண்டபடி 90 சத விகிதத்தைப்பற்றி சென்னைச் சர்க்கார் செய்த உத்தரவை இரண்டு வருடங்களுக்குள் மாற்றி அத்தொகையை வேறு விதமாக ஸ்தல ஸ்தாபனங்களுக்குள் பிரித்துக் கொடுக்கலாமென்று இப்போது சர்க்காருக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனல், ஏதாவது தவறுதலாலோ, அல்லது விஷயங்களைக் கவனிக்காமலோ, அல்லது புதிய சந்தர்ப்பங்கள் ஏற்பட்டதாலோ ஏற்கனவே செய்யப்பட்ட உத்தரவை மாற்றி அத்தொகையை ஸ்தல ஸ்தாபனங்களுக்கும் வேறு விதமாக விநியோகிக்க வேண்டுமென்று சர்க்காருக்குத் தோன்றினல் தான், அவர்கள் அப்படிச் செய்யலாம். புதிதாகச் செய்யப்பட்ட உத்தரவு காரணமாக எந்த ஸ்தல ஸ்தாபனமாவது தாம் பெற்றுக்கொண்ட தொகை திருப்பிக் கொடுக்க வேண்டியிருந்தால், அத்தொகையை வசூல் செய்யவும் ராஜ்ய சர்க்காருக்கு அதிகாரம் கொடுத்துப் புதிய ஷரத்துக்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

இது 37 வருடங்களாக இந்தியா, பர்மா, சிலோன், மலேயா, இந்தோ - சைனா முதலிய நாடுகளில் கோடிக்கணக்கான மக்களுக்கு நிவாரணமளித்து நற்கியாதியுடன் தங்க மெடல்களும் நற்சாட்சிப் பத்திரங்களும் பெற்றது.

எல்லாவித படை, சொறிசிரங்கு, கக்கூஸ் பத்து, அரிப்பு, வண்டுகடி, புழுக்கடி எச்சிற்றழும்பு, கருநிறமுள்ள தடிப்பு, மேகப்படை முதலிய தோல் வியாதிகளை உடனே குணப்படுத்தும்.

பெரிய சைஸ் பாட்டில் ஒன்று அணு 12.
சிறிய ,, ,, அணு 6

எல்லா கடைகளிலும் கிடைக்கும்.

தயாரிப்பவர்கள்:— ஜெயரசம் டிப்போ,
அய்யம்பேட்டை S. Ry.

சென்னை - புகையிலை விற்பனை வரி - பதிவுச் சட்ட விதிகள் (1953)

சென்னைப் புகையிலை விற்பனை வரிப் பதிவுச் சட்டத்தின் செக்ஷன் 16ல் கண்ட அதிகாரங்களை உபயோகித்து, சென்னைச் சர்க்கார் விதிகள் ஏற்படுத்தி இருக்கின்றனர். இவ்விதிகள் 24-4-1953 தேதியுள்ள சென்னைச் சர்க்கார் கெஜட் பாகம் I விசேஷ வெளியீட்டில் பிரசுரம் செய்யப்பட்டிருக்கின்றன. இவ்விதிகளின் முக்கிய அம்சங்கள் மட்டில் கீழே சுருக்கமாக விளக்கப்பட்டிருக்கின்றன.

வியாபாரஸ்தலம்

இவ்விதிகளில் 'வியாபாரஸ்தலம்'—என்பது ஒரு வியாபாரியானவர் எந்த இடத்தில் எந்த ரூபத்திலிருக்கும் புகையிலையை வாங்குகிறாரோ அந்த இடத்தையும், எந்த இடத்தில் அவ்விதப் புகையிலையை விற்பனை செய்கிறாரோ

வரிகள்

அந்த இடத்தையும் தாம் புகையிலை வாங்கி விற்பதைப் பற்றி எந்த இடத்தில் கணக்குகள் வைத்துக் கொண்டிருக்கிறாரோ அந்த இடத்தையும் குறிப்பிடும். அவ்விதமான இடங்கள் ஒன்றுமில்லாத புரோகர்கள், கமிஷன் ஏஜண்டுகள் அல்லது தெருவில் விற்பனை செய்பவர்களுடைய சாதாரண வாசஸ்தலமே அவர்களுடைய வியாபார ஸ்தலமாகப் பாவிக்கப்படும்.

பதிவு அத்தாட்சி அல்லது 'ரிஜிஸ்ட்ரேஷன்' சர்ட்டிபிகேட்

புகையிலையில் தொழில் செய்பவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு வியாபார ஸ்தலத்தையும் பதிவு (ரிஜிஸ்டர்) செய்து கொள்ள வேண்டும். ('புகையிலை' என்பதில் சிகார் சுருட்டு, சிகரெட், சிகரெட் புகையிலை பைப்புகையிலை, பீடி, மூக்குத்தூள் ஆகிய தயார் செய்யப்பட்ட புகையிலையும் சரிபாடம் செய்யப்பட்ட புகையிலை, பாடம் செய்யப்படாத புகையிலை, புகையிலையால் செய்யப்பட்ட அல்லது புகையிலை கலக்கப்பட்ட சரக்கு இவை எல்லாம் அடங்கும் என்பதைக் கவனிக்கவும்.)

விதிவிலக்கு:—வரி விதிக்கப் பட்ட புகையிலையில் வியாபாரம் செய்யாமலும், கடையோ, நிரந்தரமான வியாபார ஸ்தலமோ வைத்துக் கொள்ளாமலும் மைனர் பஞ்சாயத்துக் கிராமங்களிலும் பஞ்சாயத்தே இல்லாத நாட்டுப் புறங்களிலும் புகையிலையில் வியாபாரம் செய்பவர்கள் மட்டில் பதிவு செய்து கொள்ள வேண்டியதில்லை. அவர்களுக்கு மட்டில் விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.

20—6—1953க்குள் மனுப் போட வேண்டும்

மேற் கண்ட விதி விலக்கு அளிக்கப் பட்டவர்கள் தவிர, மற்றப்புகையிலையில் தொழில் செய்யும் எவரும் அதாவது, மொத்த வியாபாரிகள், சில்லறை வியாபாரிகள், இரண்டு வியாபாரமும் செய்பவர்கள் கமிஷன் ஏஜண்டு, தரகர்கள் யாவரும் 20-6-1953 தேதிக்குள் அதிகாரியிடம் சேரும்படி மேற்கண்டபடி பதிவு செய்து கொள்ள மனுப்போட வேண்டும். மனு நமூனா I இன்படி இருக்க வேண்டும். மனுவில், மனுதார் தொழில் செய்வது எவ்வித சரக்குகள் என்றும், வரிவிதிக்கப் பட்ட புகையிலையில் வியாபாரம் செய்கிறாரா என்றும் எந்த எந்த வகைச் சரக்குகளில் வியாபாரம் செய்கிறார் என்றும், அவைகளைத் தாமே இறக்குமதி செய்கிறாரா என்றும் விபரம் சொல்லப்பட வேண்டும். பதிவு செய்து கொள்ளுவது மார்ச்சு 31 தேதியோடு அமுல் இழந்து விடும். அடுத்த வருடம் முதல் பதிவைப் புதுப்பித்துக் கொள்ள ஏப்ரல் 30 தேதிக்குள் நமூனா I இன்படி மனுப் போட வேண்டும். பதிவு அதிகாரிக்கு (Regis-

tering Authority)த் தான் இம்மனுப் போடவேண்டும். அதாவது வரி விதிக்கப் படவேண்டியவர்களுக்கு வரி விதிக்கக் கூடிய அதிகாரியேதான் பதிவு அதிகாரி. மற்றவர்களுக்கு எ. சி. டி. ஒ. (அசிஸ் டெண்ட் கமர்சியல் டாக்ஸ் ஆபீசர்) தான் பதிவு அதிகாரி. ("வக்கீல்"—1953—மே இதழ்-பக்கம் 13—பார்க்கவும்.)

கட்டணம்: பதிவு மனுவுடன் கட்டணம் சில்லறை வியாபாரிகளுக்கு ரூ. 1. மற்ற வர்களுக்கு ரூ. 10. இதைக் கஜானுவில் கட்டி ரசீதை மனுவுடன் அனுப்பவேண் டும்: அல்லது பதிவு அதிகாரிக்கு மணியார் டர் மூலமும் அனுப்பலாம். மனுவையும் கட்டணத்தையும் பெற்றுக் கொண்டு பதிவு அதிகாரியானவர் நமூனு 2-இன்படி பதிவு அத்தாட்சி அல்லது 'ரிஜிஸ்ட்ரேஷன் சர்ட்டிபிகேட்'—கொடுப்பார். அது கெட் டுப் போய் விட்டால், அணு 4 செலுத்தி, 'ட்யூப்ளிகேட்' வாங்கிக் கொள்ளலாம். ரிஜிஸ்ட்ரேஷன் சர்ட்டிபிகேட்டை எவருக் கும் விற்பனே செய்வதும் மாற்றவும் முடியாது. ஒரு வியாபாரி தம் வியாபா ரத்தை வேறு ஒருவருக்கு மாற்றினல், புதிய வியாபாரி மறுபடியும் தம் பெயருக் குப் புதிதாக ரிஜிஸ்ட்ரேஷன் சர்ட்டிபி கேட் வாங்கிக் கொள்ள வேண்டும். ஆனல் பழைய வியாபாரி கொடுக்க வேண்டிய வரி கட்டணங்கள் முதலியவைகளேப் புதிய வியாபாரியும் கொடுக்கக் கடமைப்பட்டி ருக்கிருர். ஒரு வியாபாரி வேறு ஒருவரு டன் கூட்டுச் சேர்ந்து கொண்டால் அவ் விஷயத்தை 30 நாட்களுக்குள் பதிவு அதி காரிக்குத் தெரியப் படுத்தி, சர்ட்டிபிகேட் டிலும் இவ்விஷயத்தைப் பதிவு செய்து கொள்ள வேண்டும். கூட்டு கலேக்கப் பட்டாலும் 15 நாட்களுக்குள் பதிவு அதிகாரிக்குத் தெரியப் படுத்த வேண்டும். வியாபாரம் நிறுத்தப்பட்டாலும் அதைப் பதிவு அதிகாரிக்குத் தெரியப் படுத்த வேண்டும். வியாபாரி இறந்து விட்டாலும் அவருடைய வார்சுகள் மேற்கண்டபடி தெரியப் படுத்த வேண்டும். ஒரு வியாபாரி யானவர் தம்முடைய வியாபார ஸ்தலத்தை வேறு இடத்திற்கு மாற்ற வேண்டுமானு லும் 15 நாட்களுக்கு முன்பே இதைப் பதிவு அதிகாரிக்குத் தெரிவித்து சர்ட்டிபி கேட்டைத் திருத்திக் கொள்ள வேண்டும்.

ரிஜிஸ்ட்ரேஷனேப் புதுப்பிக்கச் சரியான கெடுவில் மனுப் போட்டு, கட்டணமும் கட்டி விட்டால், சர்ட்டிபிகேட் கொடுக்க அதிகாரிகளால் தாமதம் ஏற்பட்டாலும் பாதகமில்லை: வியாபாரி தம் வியாபாரத் தைத் தொடர்ந்து நடத்தலாம்.

சர்ட்டிபிகேட்டைப் பகிரங்கமான இடத்தில் வைத்திருக்க வேண்டும்

பதிவு சர்ட்டிபிகேட்டை வியாபார ஸ்தலத் தில் யாவருக்கும் தெரியும்படியான இடத் தில் பகிரங்கமாக வைத்திருக்க வேண்டும். வியாபாரஸ்தலம் ஒன்றுமில்லாதவர்களும், புரோகர்கள் கமிஷன் ஏஜண்டுகள் இவர் களும் பதிவு சர்ட்டிபிகேட்டைத் தங்களு டன் வைத்துக் கொண்டு அதிகாரிகள் கேட்கும் போது எடுத்துக் கொடுக்க வேண்டும்.

மானேஜர் யார் என்று தெரிவிக்க வேண்டும்

புகையிலேயில் தொழில் செய்பவர் எவரும் இச்சட்டம் வரும் போது தம் தொழிலுக்கு ஒரு மானேஜர் நியமித்திருந் தால், அவர் பதிவு மனுப்போட்ட 30 நாட் களுக்குள் நமூனு 11 இன்படி மானேஜர் யார் என்பதைப் பதிவு அதிகாரிக்குத் தெரிவிக்க வேண்டும். இச்சட்டம் வந்த பிறகு புதிதாக ஒரு மானேஜர் நியமித் தாலும் 30 நாட்களுக்குள் அதே விதம் தெரிவிக்க வேண்டும். மானேஜர் கொடுக் கும் கணக்குகள் (ரிடர்ன்கள்) எல்லாம் வியாபாரியைக் கட்டுப் படுத்தும். புதிய புதிய மானேஜரைப் பற்றி நமூனு 11 இன் படி தெரியப்படுத்தும் வரை பழைய மானேஜர் செய்வது தான் வியாபாரியைக் கட்டுப்படுத்தும்.

வரி விதிக்கும் அதிகாரி

டிப்டி கமிஷனருடைய தலேமை ஆபீஸ் இருக்கும் இடங்களில் பிரதான வியாபார ஸ்தலமுள்ள வியாபாரிகளுக்கு அவ்வதி காரியே தான் வரி விதிப்பார். மற்றவர் களுக்கு அந்தந்த வியாபாரியின் பிரதான வியாபர ஸ்தலத்திற்கு அதிகாரமுள்ள அந்த ஜில்லாவின் சி. டி. ஒ. (கமர்சியல் டாக்ஸ் ஆபீசர்) தான் வரி விதிக்கும் அதிகாரி. சென்னே ராஜ்யத்திற்கு வெளியே தலேமை வியாபாரஸ்தலம்

உள்ள வியாபாரிகளுக்கு இந்த ராஜ்யத்தில் பிரதான கிளை வியாபார ஸ்தலம் எங்கே இருக்கிறதோ அதற்கு அதிகாரமுள்ள மேற்கண்ட அதிகாரிகள் தான் வரி விதிக்க வேண்டும்.

பல வியாபார ஸ்தலங்களை உடைய வியாபாரியானவர், எல்லாக் கிளைகளுக்கும் உள்படப் பிரதான வியாபாரஸ்தலத்தி லிருந்து 'ரிடர்ன்' (கணக்குகள்) கொடுக்க வேண்டும். கிளை வியாபாரஸ்தலங்களும் அந்த இடத்திற்கு அதிகாரமுள்ள அதிகாரிக்கு நமூனா 3 அல்லது நமூனா 6-இன்படி ஒரு ரிடர்னும் அனுப்ப வேண்டும். அக் கணக்குகள் தலைமை வியாபாரஸ்தல ரிடர்னிலும் சேர்க்கப்பட்டிருக்கிற விஷயத்தையும் அதில் தெரிவிக்க வேண்டும்.

புதிதாக வியாபாரம் ஆரம்பிப்பவர்கள்

இச்சட்டம் அமுலுக்கு வந்த பிறகு புகையிலை வியாபாரம் ஆரம்பிப்பவர்கள் வரி விதிக்கப்படும் புகையிலையில் தமக்கு மொத்த விற்பனை எவ்வளவு நடக்கக்கூடு மென்பதை வியாபாரம் ஆரம்பித்த 30 நாட்களுக்குள் நமூனா 4 இன்படி வரி விதிக்கும் அதிகாரிக்குத் தெரிவிக்க வேண்டும்.

பழைய வியாபாரிகள் 20-6-1953 தேதிக்குள் நமூனா 4-இன் படி ஒரு ரிடர்ன் அனுப்ப வேண்டும்

இச் சட்டம் அமுலுக்கு வரும் முன்பே வரி விதிக்கப்பட்ட புகையிலையில் வியாபாரம் செய்பவர்கள் இச்சட்டத் தேதிக்கு (20-4-1953) 12 மாதங்களுக்கு முன் அவ் விதப் புகையிலையில் மொத்த வியாபாரம் எவ்வளவு தொகைக்குச் செய்தார்கள் என்று நமூனா நமூனா 4-இன்படி வரி விதிக்கும் அதிகாரிக்கு ஒரு 'ரிடர்ன்' (கணக்கு) அனுப்ப வேண்டும். இந்த ரிடர்ன்களைக் கவனித்தும், ரிடர்ன் அனுப்பாதவர்களுக்கு யுக்தப் படிக்கும் வருடவரி விதிக்கப்படும். இவ்வரியை 12 மாதங்களில் கொடுக்கும்படி நோட்டீஸ் அனுப்பப்படும்.

அவ்வியாபாரிகள் பிரதி வருடம் மே மாதம் முதல் தேதிககுள் முந்திய வருடத்தில் தம்முடைய மொத்த வியாபாரம் எவ்வளவு என்பதை நமூனா 3-இன்படி ரிடர்ன் அனுப்ப வேண்டும். பிறகு அவ் வருடத்திற்கு முடிவான வரி விதிப்பு செய்யப்படும். மாதா மாதம் கணக்கு அனுப்பி வரி விதிக்கப்படும் முறையையும் வருட மொத்த வியாபாரம் ரூ. 3000 க்கு அதிகமாக உள்ள வியாபாரிகள் பின்பற்றலாம். அப்படி இஷ்டப்படும் வியாபாரிகள் இவ்விஷயத்தை ஏப்ரல் முதல் தேதிக்கு முன்பே தெரிவித்து விட வேண்டும். பிறகு மாதா மாதம் 20 தேதிக்கு முன்பே முந்திய மாதக் கணக்கை நமூனா 6-இன்படி அனுப்பிவரவேண்டும்.

அப்பீல்

வரி விதிப்புப் பற்றியோ, பதிவு செய்வது சம்பந்தமாகவோ ஏ. சி. டி. ஓ அல்லது டிப்டிகமர்சியல் டாக்ஸ் ஆபீசர் செய்யும் உத்தரவின் பேரில் ஜில்லா சி. டி. ஓவுக்கு அப்பீல் உண்டு. சி. டி. ஓ செய்யும் வரி விதிப்பு அல்லது பதிவு சம்பந்தமான அசல் உத்தரவின் பேரில் டிப்டி கமிஷனருக்கும் டிப்டி கமிஷனர் செய்யும் வரி விதிப்பு அல்லது பதிவு சம்பந்தமான அசல் உத்தரவின் பேரில் கமிஷனருக்கும் அப்பீல் உண்டு. அப்பீல் 30 நாட்களுக்குள் கொடுக்கப்பட வேண்டும். அப்பீல் செய்பவர் தாம் கொடுக்க வேண்டியதாக ஒப்புக்கொள்ளும் தொகையைக் கட்டி விட்டு அப்பீல் செய்ய வேண்டும். அப்பீல் மனுவைத் தபாலிலும் அனுப்பலாம்; நேரிலோ, வக்கீல் மூலமாகவோ கொடுக்கலாம். அப்பீலில் ஏற்படும் உத்தரவை டிப்டி கமிஷனரோ, கமிஷனரோ பரிசீலனை செய்யலாம். அதற்குட்பட்டு அப்பீலில் ஏற்படும் தீர்ப்பே முடிவானது. எ.சி.டி.ஓ அல்லது டி. சி. டி. ஓ செய்யும் உத்தரவுகளைப் பரிசீலனை செய்ய சி. டி. ஓ. வுக்கும் அதிகாரம் உண்டு.

கணக்குகள் வைத்துக் கொள்ள வேண்டும்

வரி விதிக்கப்பட்ட புகையிலை வியாபாரிகள் சரியாகத் தினசரிக் கணக்குகள் வைத்துக் கொள்ள வேண்டும். ஒவ்வொரு வகை வரி விதிக்கப்பட்ட புகையிலையையும் வாங்கிய அளவு, விலை, யாரிடம் வாங்கியது விற்பனை செய்த விலை, யாருக்கு விற்பனை செய்யப் பட்டது இவ்விவரங்களுடன்

கணக்கில் காண்பிக்க வேண்டும். புகையிலை வரி விதிக்கப்பட்ட இறக்குமதி செய்ப வரிடமிருந்தோ, உற்பத்தியாளரிட மிருந்தோ, மொத்த வியாபாரி அல்லது கமிஷன் ஏஜண்டினிடமிருந்தோ சரக்கு வாங்கும் சில்லறை வியாபாரி தாம் செய்த விற்பனைக்குக் கணக்கு வைத்துக் கொள்ளு வது அவசியமில்லை. கணக்குகளைப் புகை யிலை அதிகாரிகள் சோதனை செய்யலாம். கணக்குகள் அவ்வருடம் முடிந்து 3 வருடங் கள் வரை ஜாக்கிரதையாக வைத்துக் கொள்ளப் பட வேண்டும்.

பொது விற்பனை வரி, (மொத்த விற்பனை-வரி விதிப்பு விதிகள் திருத்தம். எலெக்ட்ரிக் வேலை, சாய வேலை, சிற்ப வேலைகள்.

பொது விற்பனை வரிச் சட்டத்தின் செக்ஷன் 3 (4), (5) இவைகளில் கண்ட அதிகாரங்களை உபயோகித்து, சென்னைச் சர்க்காரால் விற்பனை வரி (மொத்த விற்பனை—வரி வீதிப்பு) விதிகளில் (Madras General Sales Tax Turn-over and Assessment Rules 1939) கீழே கண்ட திருத்தங்கள் செய்யப்பட் டிருக்கின்றன.

(1) ஒப்பந்த வேலைகளில் (Works Contract) சரக்குகள் விற்பனை செய்யப் படும் தொகையில், உழைப்பு அல்லது வேலைப்பாட்டுக்காக எவ்வளவு சதவிகிதம் குறைத்துக் கொண்டு பாக்கித் தொகை யைத்தான் சரக்கின் விலையாகப் பாவிக்க வேண்டுமென்று குறிப்பிடும் விதி 4 (3)ல் சில திருத்தங்கள் செய்யப்பட்டிருக் கின்றன. அவையாவன:—எலெக்ட்ரோ பிளேட்டிங் தவிர மற்ற எலெக்ட்ரிக் ஒப்பந்த வேலைகளில் 20 சதவிகிதமும்; எலெக்ட்ரோ பிளேட்டிங் வேலைகளில் 27 சதவிகிதமும், ஜவுளி சாயம் தோய்ப் பது அச்சு வேலை செய்வது இந்த வேலை களில் 50 சதவிகிதமும்; சிற்ப வேலை களிலும் கலை சம்பந்தமான வேலைகளிலும் 70 சதவிகிதமும் நிர்ணயம் செய்யப்பட் டிருக்கிறது. இது உச்சவிகிதம். இதற் குட்பட்ட ஒரு சத விகிதத்தை ரிவின்யூ போர்டார் நிர்ணயம் செய்யலாம். அச் சதவிகிதம் போக, பாக்கிதான் விற்பனைத் தொகையாகப் பாவிக்கப்படும்.

(2) விற்பனை வரிச் சட்டத்தின் செக்ஷன் 4-இன்படி மின்சார சக்தி, பெட்ரோல், புகையிலை, அபின் இச்சரக்கு களுக்கு பொது விற்பனை வரிச் சட்டப்படி வரி கிடையாது. ஆனால் ஒரு வியாபாரி யானவர் இச் சரக்குகளுக்குத் தனித்தனி யாகக் கணக்குகள் வைத்துக் கொண்டிருந் தால் தான் அவற்றின் விற்பனைத் தொகையை மொத்த விற்பனைத் தொகை யிலிருந்து கழித்துக் கொள்ளலாமென்று விதி 5 (d)ல் இருந்தது. இந்த ஷரத்து இப்போது மாற்றப்பட் டிருக்கிறது. அதாவது இச் சரக்குகளின் விற்பனை களுக்கு ஒரு வியாபாரி தனியாகக் கணக்கு கள் வைத்துக் கொள்ளாவிட்டாலும், வரி விதிக்கும் அதிகாரியானவர் தமக்கு யுக்த மாகத் தோன்றும் விதத்தில் வரி கொடுக்க வேண்டிய சரக்குகளின் மொத்த விற் பனைத் தொகையை நிர்ணயம் செய்யலா மென்று அதிகாரம் கொடுக்கப்பட்டிருக் கிறது.

(3) ரிஜிஸ்டர் கட்டணத் தொகையை யோ வரித் தொகையையே 'செக்' மூலம் அனுப்பலாமென்று இருந்த இடங்களில் எல்லாம் 'கிராஸ் செக்' மூலம் அனுப்ப லாம் என்று விதிகளும் நமூனாக்களும் திருத்தப்பட்டிருக்கின்றன.

(4) புதிதாக வியாபாரம் ஆரம்பிக்கும் வியாபாரிக்கு அவர் வியாபாரம் ஆரம் பித்த முதல் பன்னிரண்டு மாதங்களுக்குள் மொத்த வியாபாரம் ரூ. 10,000 ஆகி விட்டால், ரூ. 10,000 ஆன தேதியி லிருந்து 30 நாட்களுக்குள் அவர் வரி விதிக்கும் அதிகாரிக்கு AI நமூனாப்படி ரிடர்ன் அனுப்பவேண்டு மென்று விதி 6 (2) இருந்தது. இப்போது மாற்றப் பட்டிருக்கிறது. அதாவது புதிய வியா பாரிக்கு எந்த வருடத்தில் (அதாவது ஏப்ரல் முதல் தேதி முதல் மார்ச்சு 31தேதி முடிய கணக்குச் செய்யப்படும் வருடத் தில்) நிகர வியாபாரத்தொகை (Net

187723

Turn over) எந்தத் தேதியில் ரூ. 10000 ஆகின்றதோ அத்தேதியிலிருந்து 90 நாட்களுக்குள் அவர் வரி விதிக்கும் அதிகாரிக்கு AI நமூனுப்படி ரிடர்ன் அனுப்ப வேண்டுமென்று அவ் விதி திருத்தப்பட்டிருக்கிறது (5) விதி 11(1)ல் இரண்டாவது பாரா ரத்துச் செய்யப் பட்டது. (6) விதி 13ல் கண்டபடி மாதா மாதம் கணக்குக் கொடுக்கும் முறையைப் பின்பற்ற விரும்பும் வியாபாரியானவர் அவ்விருப்பத்தை ஏப்ரல் முதல் தேதிக்கு முன்பே தெரிவித்துவிட வேண்டுமென்று விதி 13ல் இருக்கிறது. ஒரு வியாபாரிக்கு வருடக் கணக்குக் கொடுப்பதால் கஷ்டங் கள் ஏற்படும் என்று கமர்சியல் டாக்ஸ் ஆபீசர் அபிப்பிராயப்பட்டால், முதல் 3 மாதங்களுக்குள் அவ்வியாபாரியை மாதவாரிக் கணக்கு வரி விதிப்பு முறைக்கு மாற்றிக்கொள்ளும்படி அனுமதிக்கலாம்- என்று அவ்விதியில் இப்போது சேர்க்கப் பட்டிருக்கிலது. (7) ரிஜிஸ்டர் செய்து கொண்ட கடலை எண்ணெய் கடலைப் புண்ணுக்கு உற்பத்தியாளர்கள் A9 நமூனுப்படி அனுப்பும் ரிடர்ன் மாதா மாதம் 25 தேதிக்குள் வரிவிதிக்கும் அதிகாரியிடம் கிடைக்கும்படி அனுப்ப வேண்டுமென்று விதி 18 (3) திருத்தப் பட்டிருக்கிறது. (8) நமூனு AIனின் வாசகம் திருத்தி அமைக்கப்பட்டிருக் கிறது.

(6-5-1953 சென்னைச் சர்க்கார் கெஜட்-ரூல் சப்ளிமெண்ட்-பாகம் I-பக்கம் 166.)

பொது விற்பனைவரிச் சட்ட அதிகாரிகள்

சென்னைப் பொது விற்பனைவரிச் சட்டத்தின் செக்ஷன் 2, 14 இவைகளில் கண்டிருக்கும் அதிகாரங்களை உபயோ கித்து அடியில்கண்டபடி சில அதிகாரி களுக்குச் சர்க்காரால் அதிகாரம் கொடுக் கப்பட்டிருக்கிறது. அதாவது:- (a) எந்த இடத்திற்காவது டி. சி. டி. ஓ. (டிப்டி கமர் சியல் டாக்ஸ் ஆபீசர்) இல்லாவிட்டால், அவருடைய அதிகாரங்களை அந்த இடத் திற்கு அதிகாரமுள்ள எ. சி. டி. ஓ. (அசிஸ் டெண்டு கமர்சியல் டாக்ஸ் ஆபீசர்) செலுத்தலாமென்றும் (b) எ. சி. டி. ஓ. இல்லாத இடங்களில் டி. சி. டி. ஓ. வே அவ்வதிகாரங்களையும் செலுத்தலா மென்றும் (c) டிப்டி கமிஷனர் தம் அதி கார எல்லைக்குள் ஒரு அடிஷனல் டி. சி. டி. ஓ. அல்லது எ. சி. டி. ஓ. வை நியமிக்க லாமென்றும், அப்படி நியமிக்கப்படும் அதிகாரிகளும் அந்த ஜில்லா சி. டி. ஓ வுக்கு (கமர்சியல் டாக்ஸ் ஆபீசருக்கு) உட்பட்டு அதிகாரத்தைச் செலுத்த வேண்டுமென்றும் 1939 ஆம் வருடத்திய அறிக்கையில் இப்போது சேர்க்கப்பட்டிக் கிறது.

(29-4-1953)-சென்னைச் சர்க்கார் கெஜட்-பாகம் I-பக்கம் 633)

பொது விற்பனைவரி-கம்போஸ்டு எருவுக்கு விற்பனைவரி விதிவிலக்கு

பொது விற்பனைவரிச் சட்டத்தின் செக்ஷன் 6 (1) ல் கண்ட அதிகாரங்களை உபயோகித்து, விவசாயிகளுக்கும் விவ சாயக் கூட்டுறவுச்சங்கங்களுக்கும் சென்னை கார்ப்பொரேஷனாலும், முனிசிபாலிட்டி கள், ஜில்லா போர்டுகள், பஞ்சாயத்துக்கள் இவைகளாலும் விற்கப்படும் 'கம்போஸ்டு' எருவுக்கு 1-4-1953 முதல் மறுபடியும் ஒருவருடத்திற்கு விற்பனைவரி கிடையா தென்று சர்க்காரால் விதிவிலக்கு அளிக்கப் பட்டிருக்கிறது.

(6-5-1953—சென்னைச் சர்க்கார் கெஜட் பாகம்-I பக்கம் 669.)

பொதுவிற்பனை வரிச்சட்டப்- நாட்டுச் செக்குகளுக்கு நிரந்தரமாக விதிவிலக்கு

பொது விற்பனைவரிச் சட்டத்தின் செக் ஷன் 6 ல் கண்ட அதிகாரங்களை உபயோ கித்து, நாட்டு எண்ணெய்ச் செக்கு ஒன் றின் அல்லது பல செக்குகளின், சொந்தக் காரராலும், அல்லது அச்செக்குகளில் பாத்தியமுள்ளவர்களாலும் அச்செக்கு களிலிருந்து உற்பத்தியாகும் சரக்குகளில் மட்டில் செய்யும் வியாபாரத்திற்கு, இனி நிரந்தரமாக, விற்பனைவரி கிடையாதென்று சர்க்காரால் விதிவிலக்கு அளிக்கப் பட்டிருக்கிறது.

(G. O. 1323—13-5-1953 தேதி சென்னைச் சர்க்கார் கெஜட்-பாகம் I பக்கம் 713.)

1953-54 வருமான வரி

1953-ஆம் வருடத்திய 14-வது மத்தியச் சட்டமாகிய நிதிச்சட்டத்தால், 1953-54 நிதிவருடத்தில், முந்திய வருடத்திய வருமானம் ரூ. 4200 க்கும் பிரிபடாத இந்துக் குடும்பமாக இருந்தால் முந்திய வருட வருமானம் ரூ. 8400 க்கும் மேல் இருந்தால் தான் வருமானவரி விதிக்கப்படுமென்று திருத்தப்பட்டிருக்கிறது, மற்ற வருமானவரி விகிதங்கள் எல்லாம் போனவருடம் இருந்தது போலவேதான் மாறுதல்கள் இல்லை.

இன்கம்டாக்ஸ் சட்டத் திருத்தம்.

இந்தியாவிலிருந்து வெளி நாடு செல்பவர்கள் வருமான வரி (இன்கம்டாக்ஸ்) பாக்கி இல்லை என்ற அத்தாட்சி தாகல் செய்யவேண்டும்.

புதிதாக இந்தியவருமான வரிச்சட்டத்தில் சேர்க்கப்பட்ட செக்ஷன் 45 A-ன் படிக்கும், அதன்படி இயற்றப்பட்டிருக்கும் விதிகளின்படிக்கும், இந்தியாவிலிருந்து தரை மார்க்கமாகவோ, அல்லது ஆகாயம் அல்லது கடல் மார்க்கமாகவோ வெளிநாடு போகின்றவர்கள் இதற்காக நியமிக்கப்பட்டிருக்கும் அயல்நாட்டுப் பகுதி இன்கம்டாக்ஸ் ஆபீசரிடமிருந்து (Income-Tax officers-Foreign Section) அவருக்கு வருமானவரி பாக்கி இல்லை என்ற அத்தாட்சியாவது (Tax clearance Certificate) அல்லது விதிவிலக்கு அத்தாட்சியாவது (Exemption Certificate) தாகல் செய்தால்தான் இந்தியாவை விட்டு வெளியே போக அனுமதி கொடுக்கப்படும். இப்போது அயல்நாட்டுப்பகுதி இன்கம்டாக்ஸ் ஆபீசர்கள் டில்லி, பம்பாய், கல்கத்தா, மதராஸ், விசாகபட்டணம், நாகபட்டிணம், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, காரைக்குடி, தூத்துக்குடி, மங்களூர், ஏர்ணுகுளம், போர்பந்தர், ஜாம்நகர், ஜுனகாட், பூஜ்-இந்த இடங்களில் நியமிக்கப்பட்டிருக்கின்றனர்.

விதிவிலக்குகள்

ஆனால் கீழேகண்டவைகளைச் சேர்ந்தவாகள் மேற்கண்ட அத்தாட்சி தாகல் செய்யவேண்டியதில்லை என்று மத்திய சர்க்காரால் விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கின்றனர். அவர்களாவன:—
(1) 18 வயதுக்குட்பட்டவர்கள் (2) வெளி நாட்டிலிருந்து வேறு நாட்டுக்கு நேராக டிக்கெட்டோ அல்லது ரிட்டர்ன் டிக்கட்டோ வைத்துக்கொண்டு 90 நாட்களுக்குமேற்படாமல் இந்தியாவில் தங்குபவர்கள். (3) மத்தியசர்க்கார், ராஜ்ய சர்க்கார்கள், ஸ்தல ஸ்தாபனங்கள் இவற்றின் உத்யோகஸ்தர்களும் அவர்களின் மனைவிகளும். (4) அயல்நாட்டு தூதர் வகையரு (5) அயல்நாட்டிலிருந்து சர்க்கார் அலுவலாக வருபவர்களும் அவர்களின் மனைவிகளும் (6) மோட்டா வேலைகளுக்காக (Unskilled work) சிலோன், பர்மா, அல்லது மலாயாவுக்குப் போக புரொடெக்டர் ஆப் எமிகிரண்ட்ஸ் (Protector of Emigrants) என்ற அதிகாரியால் அனுமதிக்கப்பட்டவர்கள்; அவ்வதிகாரியால் நுட்பமான தொழில்களுக்காக (Skilled work) வெளிநாடுபோகலாமென்று அனுமதிக்கப்பட்டவர்கள் (7) 31-12-1953 க்குள் மெக்காவுக்கு ரிடர்ன் டிக்கட்டில் யாத்திரைக்கப்பலில் பிரயாணம் செய்பவர்கள்.

வருமானவரி அத்தாட்சியோ, விதிவிலக்கு அத்தாட்சியோ வேண்டியவர்கள் மேலே கண்ட இன்கம்டாக்ஸ் ஆபீசர் ஒருவருக்கு மனுப்போடவேண்டும். வருமானவரி விதிக்கப்பட்டவர்கள் அவரவருக்கு வரிவிதித்த இன்கம்டாக்ஸ் ஆபீசரிடமிருந்து நமூனா A ன்படி ஒரு அத்தாட்சி (Authorisation) வாங்கிக் கொள்ளவேண்டும். இதைத் தாகல்செய்து வருமானவரி அத்தாட்சியோ, விதிவிலக்கு அத்தாட்சியோ பெற்றுக்கொள்ளலாம்.

மேற்கண்டபடி அயல்நாட்டுப்பகுதி இன்கம்டாக்ஸ் ஆபீசரிடமிருந்து வாங்கப்படும் அத்தாட்சிகள் எந்தத் துரைமுகங்களிலும் ஆகாய விமான நிலையங்களிலும் செல்லுபடியுள்ளவையாகும். (25-5-1953 இந்தியா கெஜட்-விசேஷ வெளியீடு.)

சர்க்கார் அறிக்கைகள்

தஞ்சை சாகுபடிதார் பண்ணையாள் பாதுகாப்புச் சட்டம்--குத்தகைச் சீட்டு எழுத, கெடு நீடிக்கப்பட்டது.

தஞ்சைச் சட்ட விதி 10-இன் படி குத்தகைச் சீட்டுகள் எழுதப்பட வேண்டிய கெடு 30-4-53 வரை நீடிக்கப் பட்டிருந்ததை இப்போது மறுபடியும் 31-5-1953 வரை சர்க்கார் நீடித்திருக் கின்றனர்.

(6—5—1953—சென்னைச் சர்க்கார்—பாகம் I—பக்கம் 669.)

* * * *

சென்னைக் கிடங்குச் சட்டம் 1—5—1953 முதல் அமுல்

1951-ஆம் வருடத்திய 15-ஆவது சென்னைச் சட்டமாகிய சென்னைக் கிடங்குச் சட்டம்) The Madras Ware houses Act 1951) 1-5-1953 முதல் அமுலுக்கு வருமென சென்னைச் சர்க்காரால் அறிக்கை பிரசுரம் செய்யப் பட்டிருக் கிறது.

(G. O. 1839—29—4—1953 தேதி சென்னைச் சர்க்கார் கெஜட்—பாகம் I பக்கம் 604)

* * * *

கட்டட வேலைகளுக்கான இரும்பு எஃகு கட்டுப்பாடு உத்தரவு ரத்து

1951-ஆம் வருடத்திய சென்னை இரும்பு எஃகு கட்டட வேலை உபயோகக் கட்டுப்பாடு உத்தரவு (Madras Iron and street Control of use in Buildings Order 1951) சென்னைச் சர்க்காரால் ரத்து செய்யப் பட்டது.

(20—5—1953—சென்னைச் சர்க்கார் கெஜட்—பாகம் II—பக்கம் 625)

ஷாப் சட்ட விதி விலக்குகள் நகைக் கடைகளில் ஒப்பந்த வேலைக் காரர்களுக்கு இடை வேளை ஓய்வு நேர விதி கிடையாது.

சென்னை ஷாப் சட்டத்தின் செக்ஷன் 6ல் கண்ட அதிகாரத்தை உபயோகித்து நகைக் கடைகளில் ஒப்பந்தச் சம்பளம் அல்லது கூலி பேசிக் கொண்டு வேலை செய்யும் சிப்பந்திகளுக்கு செக்ஷன் 9 (2)ல் கண்ட விதி அதாவது நான்கு மணி நேரம் வேலை செய்த பிறகு குறைந்தது அரைமணி நேரமாவது ஓய்வுக்காக இடை வேளை அளிக்க வேண்டு மென்ற வீதி 7-5-1953 முதல் ஒரு வருடத்திற்குக் கிடையாதென சென்னை சர்க்கார் அவர் களுக்கு விதிவிலக்கு அளித்திருக்கின்றனர். ஆனால் அவர்களைத் தினசரி 8 மணி நேரத் திற்கு மேல் வேலை செய்யச் சொல்லவும் அனுமதிக்கவும் கூடாது. மேலும் தினசரி எந்த மணி நேரத்திற்கு முன் கடைகள் திறக்கக் கூடாது, எந்த மணி நேரத்திற் குப் பின் கடைகள் திறந்து வைக்கப்பட் டிருக்கக் கூடாதென்ற செக்ஷன் 7 (1) ல் கண்ட வீதியும் இவர்களுக்கு உண்டு. மேலும் வாரத்தில் ஒரு நாள் விடுமுறை யும் விடப்பட வேண்டும்.

(G. O. 2027—20—5—1953 சென்னை சர்க்கார் கெஜட்—பாகம் I—பக்கம் 727.)

* * * *

பால் சப்ளை டிப்போக்களும் ஸ்டால்களும்

சென்னை ராஜ்யத்திலுள்ள எல்லா பால் சப்ளை டிப்போக்களுக்கும் அவர்களுடைய ஸ்டால்களுக்கும் 14—5—1953 முதல் மறுபடியும் 6 மாதத்திற்கு அவர்

களுக்கு ஷாப் சட்டம் செக்ஷன் 7 (1)ல் கண்ட விதி கிடையாதென சென்னை சர்க்காரால் விதி விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. அதாவது தினசரி திறந்து மூடும் நேரத்தைக் குறிப்பிடும் விதி இவர்களுக்கு 6 மாதங்களுக்குக் கிடையாது.

(G. O. 2086— 20-5-1953—சென்னை சர்க்கார் கெஜட் பாகம் I—பக்கம் 727.)

‘லெவி’ கொள்முதல் உத்தரவு திருத்தம். குறுவையில் 2 ஏகருக்கு மேல் ‘லெவி’ உண்டு.

1952-ஆம் வருடத்திய ‘லெவி’ கொள்முதல் உத்தரவில் சென்னைச் சர்க்கார் கீழே கண்ட திருத்தங்கள் செய்திருக்கின்றனர்.

(1) தமிழ் நாட்டில் தஞ்சை ஜில்லா சம்பந்தப்பட்டவரையில் குறுவை மகசூலுக்கு, 2 ஏகர் வரை குறுவை சாகுபடி செய்பவர்கள் ‘லெவி’ நெல் கொடுக்க வேண்டியதில்லை. 2 ஏகருக்கு மேல் குறுவை சாகுபடி செய்பவர்கள் ‘லெவி’க்கு நெல் விற்கவேண்டும் (சம்பா, தாளடி இவற்றிற்கு 5 ஏகர்வரை ‘லெவி’ கிடையாதென்று முன் உத்தரவிலேயே இருக்கிறது.)

(2) ‘லெவி’ விகிதம் கண்டுள்ள ஷெடியூல் 2 என்பது கீழே கண்டபடி திருத்தி அமைக்கப்பட்டிருக்கிறது.

தஞ்சை ஜில்லா சம்பந்தப்பட்ட வரையில்

தஞ்சை ஜில்லா சம்பந்தப்பட்டவரை ஏகர் 1க்கு எவ்வளவு மூட்டைகள் ‘லெவி’க்காக அளக்க வேண்டுமென்பது அடியில் கண்டபடி திருத்தி அமைக்கப்பட்டிருக்கிறது.

குறுவை தவிர மற்ற நெல் சாகுபடியில்:

தஞ்சை ஜில்லா சம்பந்தப் பட்டவரையில்	5 ஏகருக்குமேல் 25 ஏகர் வரை.		25 ஏகருக்கு மேல் 40 ஏகர் வரை		40 ஏகருக்கு மேல்	
	முதல் போகம் சம்பா	இரண்டாம் போகம் சம்பாவும் ஊடும்	முதல் போகம் சம்பா	இரண்டாம் போகம் சம்பாவும் ஊடும்	முதல் போகம் சம்பா	இரண்டாம் போகம் சம்பாவும் ஊடும்
திருத்துறைப் பூண்டி பட்டுக்கோட்டை தாலூகாக்களில்.	ஏகர் 1க்கு மூட்டை 3	3	4	3	5	3
மற்றத் தாலூக்காக்களில்	4	3	5	3	6	3

குறுவையில்:

	2 ஏகருக்குமேல் 25 ஏகர் வரை ஏகர் 1க்கு மூட்டை	25 ஏகருக்கு மேல் 40-ஏகர் வரை	40 ஏகருக்கு மேல்
திருத்துறைப் பூண்டி பட்டுக்கோட்டை தாலூகாக்களில்	3	4	5
மற்ற தாலூகாக்களில்	4	5	6

(20-5-1953 சென்னைச் சர்க்கார் கெஜட்—பாகம் II ரூல் சப்ளிமெண்ட்—பக்கம் 66)

இப்பகுதியில் நமது சுப்ரீம் கோர்ட், ஹைகோர்ட்டுகள் முதலிய உயர் நீதி மன்றங்களின் நீதிபதிகளால் அளிக்கப்படும் தீர்ப்புகளின் முக்கிய அம்சங்களை ஒட்டி சட்ட விளக்கம் செய்யப்படும். சட்ட தத்துவங்களை விளக்கும் அன்னிய நாட்டுஉயர் நீதிபதிகளின் அபிப்பிராயங்களையும் நேயர்கள் இங்கே வாசிக்கலாம்.

கிரிமினல் கேசுகளில் முதல் விசாரணையில் எக்காரணத்தைக் கொண்டாவது பொய் வாக்குமூலம் கொடுத்துவிட்ட ஒருவர் பின்பு கோர்ட்டில் முடிவான விசாரணையின்போது உண்மையை சொல்லிவிட்டால் அச்சாக்ஷி பேரில் நடவடிக்கைகள் ஏற்படுமா?

(எழுதியவர்:—திரு. S. சாம்பசிவய்யர், வக்கீல்.)

இப்பிரச்னை சமீபத்தில் தீர்ப்பு அளிக்கப்பட்ட ஒரு வழக்கில் சென்னை ஹைகோர்ட்டால் முடிவு செய்யப்பட்டிருக்கிறது. 1942 B 26 I L R and 37 C 618 ன் தீர்ப்புகளை அனுசரித்து இந்த தீர்ப்பும் இருக்கிறது. உண்மையான சாட்சியம் கோர்ட்டில் ஏற்பட வேண்டியதை உத்தேசித்து முடிவான கோர்ட்டு விசாரணையில் ஒருவர் உண்மையைச் சொன்னால் (அதுவே பொய்யென்று கண்டுபிடிக்க முகாந்திரங்கள் இல்லாவிட்டால்) முதல் விசாரணையில் அவர் வேறு விதமாக வாக்குமூலம் கொடுத்திருந்தாலும் அந்த சாக்ஷிபேரில் அவர் பொய் வாக்கு மூலம் கொடுத்தது பற்றி யாதொரு நடவடிக்கை எடுக்கக் கூடியதல்ல என்றும் ஆனால் முன் சொல்லிய பொய் வாக்கு மூலத்தினால் வேறு எவர் பேரிலாகிலும் பொய் நடவடிக்கை ஏற்பட்டிருந்தால் அதற்கு மட்டில் அவர் ஜவாப் சொல்லித்தீரவேண்டும் என்பதுதான் நீதிபதி அவர்களின் அபிப்பிராயம். இவ் வழக்கில் 3-11-50ல் நடு இரவில் பாயம்மாள் என்பவள் குத்தப்பட்டாள். அவர் 4 பேர்கள் பெயரைச் சொல்லி அவர்களும் மற்றொருவரும் தன்னைக் குத்தின சம்பவத்தில் சம்பந்தப் பட்டவர்கள் என்று உடனேயும், ஆஸ்பத்திரியில் மாஜிஸ்ட்ரேட் முன்பும் சொன்னாள். ஆனால் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் தன்னை குத்தியதில் சம்பந்தப் பட்டவர்கள் இன்னாரென்று அடையாளம் தெரியவில்லை என்று சொல்லிவிட்டாள். அவள் மருமகன் அவர் சொல்லியிருந்தபடியே போலீசில் எழுதி வைத்திருந்தார். ஆனால் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் அவரும் தன் மாமியார் அவ்விதம் சொல்லவில்லை என்றும் தான் தவறுதலாய் சொல்லிவிட்டதாகவும் கோர்ட்டில் வாக்கு மூலம் கொடுத்தார். கோர்ட்டில் அவர்கள் சொன்னது நிச்சயமாக பொய்யாக ஊகிக்க முடியவில்லை. இந்த ஸ்திதியில் பொய் சாக்ஷி சொன்னதாக் குற்றம் சாட்டக்கூடியதில்லையென்றும் ஆனால் குறிப்பிட்டவர்கள்மீது பொய்யாக அது தெரிந்து மாஜிஸ்ட்ரேட் இடமும் போலிஸாரிடமும் சொல்லி பொய் வழக்கை கிளப்பி விட்டதற்கு அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கலாமென்றும் இவ் வழக்கில் தீர்ப்பளிக்கப்பட்டது.

ஆதாரம்: 1953 மதராஸ் வீக்லி நோட்ஸ் கிரி—77.

உள்ளூர் வாசிகள் சிலர் சேர்ந்து ஒரு சங்கம் அமைத்துக்கொண்டு ஒரு சொத்து வாங்கி, அதன் வருமானத்தைக் கொண்டு அங்கிருக்கும் விநாயகர் கோயிலில் மார்கழிமாதம் திருவாதிரை உத்சவம் செய்துவந்தனர். அச்சொத்து அக்கோயிலின் 'கட்டளை' சொத்தென்றும், இந்து மத தர்ம பரிபாலனச் சட்டப்படி அதற்கு வரி கொடுக்க வேண்டுமென்றும், 'எண்டௌமெண்ட் போர்டார்' உத்தரவிட்டனர். அது சரியா?

[ஆதாரம்:—1953 ஆல் இந்தியா ரிபோர்ட்டர் சென்னை ஹைகோர்ட்–407.]

சென்னையைச் சேர்ந்த கொசப்பேட்டையில் ஸ்ரீ வினை தீர்த்த விநாயகர் கோயில் என்ற கோயில் ஒன்று இருக்கிறது. அவ்விடத்தில் வசித்து வந்த சிலர் 1908–ம் வருடத்தில் ஒரு சங்கம் அமைத்துக் கொண்டனர். எதற்காக என்றால், பணம் வசூல் செய்யவும் அதைக் கொண்டு ஸ்ரீ வினை தீர்த்த விநாயகர் கோயிலில் ஒவ்வொரு வருடமும் மார்கழி மாதத்தில் திருவாதிரை நட்சத்திரத்தன்று உத்சவம் செய்வதற்காகவும் தான் இச்சங்கம் அமைத்துக் கொண்டனர். முதலில் இச்சங்கத்தை அவர்கள் சட்டப்படி பதிவு செய்து கொள்ளவில்லை. இச்சங்கத்தைச் சேர்ந்தவர்கள் கொடுத்த நன்கொடைத் தொகைகளைக் கொண்டு இவர்கள் 1913ல் வினை தீர்த்த விநாயகர் கோயில் தெருவில் ஒரு வீடு வாங்கினர். அவ்வீடானது அச் சங்கத்தின் அங்கத்தினர் ஒருவர் பெயரால் வாங்கப்பட்டது. ஆனால் வீடு அச்சங்கத்திற்குத் தான் சொந்த மென்பதில் ஒன்றும் சந்தேகம் இல்லை. பிறகு 1929-ல் இச்சங்கத்தினர் தங்களுடைய சங்கத்தை 1860-ம் வருடத்திய 21-வது சட்டப்படி பதிவு (ரிஜிஸ்டர்) செய்து கொண்டனர். பதிவு செய்து கொள்ளும்போது, அச்சங்கத்தின் நோக்கங்கள் என்ன என்று எழுதி வைக்கவேண்டும். இதற்கு 'மிமோராண்டம் ஆப் அசோசியேஷன்' என்று பெயர். இதில் அவர்கள் எழுதிவைத்தது என்ன என்றால், தாங்கள் வாங்கி இருக்கும் அவ் வீட்டின் வருமானத்திலிருந்து, குறைந்தது ரூ. 150க் கொண்டு, அவ்விநாயகர் கோயில் ஒவ்வொரு மார்கழி மாதம் திருவாதிரை தினத்தன்று ஒரு உத்சவம் நடத்தவேண்டு மென்பதுதான். மீதி வருமானத்தைச் சேர்த்து வைக்கவேண்டு மென்றும், அதைக் கொண்டு வேறு ஸ்தாவர சொத்துக்கள் வாங்கிக் கொள்ள வேண்டு மென்றும் அதில் கண்டிருந்தனர். 1947 வரை இச்சங்கத்தினர் திருவாதிரை உச்சவத்தை நடத்தி வந்தனர். 1947ல் ஒரு விசேஷக் கூட்டம் போட்டு அச் சங்கத்தினர் ஒரு தீர்மானம் செய்து கொண்டனர். அதாவது இது வரை தங்கள் ஊர் விநாயகர் கோயிலில் மட்டும் அவர்கள் செய்து வந்த திருவாதிரை உத்சவத்தை இனி சென்னை டவுனுக்குள்ளோ அல்லது வெளியேயோ இருக்கும் எந்தக் கோயிலும், பெரும்பான்மை அங்கத்தினர்களின் அபிப்பிராயப்படி வருடா வருடம் செய்து வரலாமென்று தங்களுடைய சங்கத்தின் நோக்கங்களை விஸ்தரித்துக் கொண்டனர்.

இந்நிலைமையில் இந்து மதஸ்தாபன பரிபலன போர்டார் இச்சங்கத்தின் வருமானத்திற்கு அறநிலையப் பாதுகாப்புச் சட்டப்படி தங்களுக்கு வரி கொடுக்க வேண்டுமென்று கேட்டனர். சங்கத்தினர் இதை ஆட்சேபித்தனர். 1927-ம் வருடத்திய அறநிலையப் பாதுகாப்புச் சட்டத்தின் செக்ஷன் 9 (11A) என்ற ஷரத்துப்படி ஒரு கோயில், அல்லது மடத்தில், குறிப்பிட்ட ஒரு மண்டகப்படி அல்லது தர்மத்தை நடத்துவதற்காக வைக்கப்பட்டிருக்கும் சொத்துக்களுக்கும் தொகைகளுக்கும் 'கட்டளை' அல்லது 'தனிப்பட்ட நிதி ஏற்பாடு' (Specific Endowment) என்று பெயர். கோயிலின் பெயரால் இருக்கும் சொத்துக்களின் வருமானத்திற்கு எப்படியோ அப்படியேதான் இக்கட்டளைச் சொத்துக்களின் வருமானத்திலிருந்தும் 'எண்டௌமெண்ட்' போர்டாருக்கு வரி அல்லது கட்டணம் கட்டவேண்டும். இதில் ஏதாவது சந்தேகங்கள் ஏற்பட்டால் அவற்றை முதலில் தீர்மானிக்க வேண்டியது எண்டௌமெண்ட் போர்டார் தான். அவர்கள் செய்த உத்தரவை ஆட்சேபித்து செக்ஷன் 84 (2)-ன்படி அச்சங்கத்தினர் ஹைகோர்ட்டில் மனுக்கொடுத்தனர். அம்மனுவை விசாரித்த நீதிபதி ராஜகோபாலன் அவர்கள் எண்டௌமெண்ட் போர்டாரின் உத்தரவை ரத்து செய்தார். இச் சங்கத்தின் சொத்திலிருந்து கிடைக்கும் வருமானமானது ஒரு குறிப்பிட்ட கோயிலுக்குச் சொந்தமான 'தனி ஏற்பாடு' அல்ல என்றும், ஆகையால் இவர்கள் எண்டௌ மெண்ட் போர்டாருக்குக் கட்டணம் கட்டவேண்டியதில்லை என்றும் அவர் தீர்ப்பளித்தனர். அதன் பேரில் எண்டௌமெண்ட் போர்டார் அப்பீல் செய்தனர். இவ்வப்பீலை விசாரித்த பிரதம நீதிபதி ராஜமன்னர் அவர்களும் உயர் நீதிபதி வெங்கடராமய்யர் அவர்களும், நீதிபதி ராஜகோபாலன்

செய்த தீர்ப்பு சரியே என்று அபிப்பிராயப் பட்டனர். இச் சங்கத்தினர், தாங்கள் வாங்கிய வீட்டை கொசப் பேட்டை ஸ்ரீவிநாயகர் கோயிலுக்கே கொடுத்து விடவில்லை. ஒரு சொத்தின் பூரா வருமானத்தையும் அப்படிக் கொடுத்திருந்தாலும் அச் சொத்தையே கொடுத்தது போலத் தான் என்பது சட்டம். இங்கே அப்படியும் இல்லை. அச்சங்கத்தின் வீட்டு வருமானத்தில் ரூ. 150 தான் அக்கோயிலின் உத்சவத்திற்காக கொடுத்திருக்கின்றனர். வருமானத்தின் ஒரு பாகத்தையாவது குறிப்பிட்ட ஒரு கோயிலுக்கு என்றும் இவர்கள் கொடுத்துவிடவில்லை. இச் சங்கத்தினர் அவ்வீட்டின் பாத்தியத்தைத் தாங்களே வைத்துக் கொண்டிருக்கிறார்களே ஒழிய வேறு எவரிடமும் 'டிரஸ்டாக' ஒப்படைத்துவிடவில்லை. தங்களையும் டிரஸ்டிகளாக இவர்கள் பிரகடனம் செய்துகொள்ளவில்லை. வீடானது எப்பொழுதும் சபைக்குத் தான் சொந்தமாக இருந்து இருக்கிறது. அதைப் போலவே தான் அதன் வருமானத்தையும் இச் சபையார் தாங்கள் இஷ்டம் போலச் செலவு செய்துகொள்ள உரிமை உள்ளவர்கள். பதிவு செய்து கொள்ளப்பட்ட இச்சபையார் தங்களுடைய நோக்கங்களை இஷ்டம் போல, மாற்றிக் கொள்ளுவதிலும் ஒன்றும் தவறு இல்லை. முதலில் இவர்கள் இவ்வீட்டின் வருமானத்தின் ஒரு பாகத்தை ஒரு கோயிலின் உத்சவத்திற்காக என்று வைத்திருந்தாலும், பிறகு அதை மாற்றிக் கொண்டு விட்டனர். ஆகையால் இச் சொத்தோ, அதன் வருமானமோ எந்தக் குறிப்பிட்ட கோயிலுக்கும் சொந்தமானதல்ல என்று நீதிபதிகள் அபிப்பிராயப்பட்டு, இச்சங்கமானது எண்டௌமெண்ட் போர்டாருக்குக் கட்டணம் கட்ட வேண்டியதில்லை என்று தீர்ப்பளித்தனர்.

இரண்டு மனைவிகளுக்கும் ஒத்துக்கொள்ளவில்லை. இரண்டாவது மனைவி தனியே வசித்துக் கணவனிடம் ஜீவனாம்சம் அடைய தாவா. அவளுக்கு அவ்வுரிமை உண்டா?

[ஆதாரம்:- 1953 (1) மதராஸ் லா ஜர்னல் 649]

மணம் செய்து கொண்ட இந்து ஸ்திரீயின் தனிவாச — ஜீவனாம்ச உரிமைச் சட்டம் (The Hindu Married Women's Right to Separate Residence and Maintenance Act) என்பது 1946-ஆம் வருடத்திய மத்தியச் சட்டம். அகில இந்தியாவிலும் அமுலில் உள்ளது. இச்சட்டம் அமுலுக்கு வந்த தேதி 4-5-1946. விவாகமான இந்து ஸ்திரீயானவள் தன் கணவன் உயிருடன் இருக்கும் வரை அக்கணவனுடன் ஒரே குடும்பமாக வசித்து வரவேண்டுமென்பதுதான் இந்துச் சட்டம். இருந்தாலும், சிற்சில சந்தர்ப்பங்களில் மனைவியானவள் கணவனுடன் வசிக்க முடியாமல் இருக்கும் சந்தர்ப்பங்களில், அவள் தனியே வசித்து வந்தாலும் கணவனிடம் ஜீவனாம்சம் பெற்று வரலாமென்பதையும், இந்துச் சட்டம் அனுமதித்து வந்தது.

எந்த எந்த சந்தர்ப்பங்களில் மனைவியானவள் தனியே வசித்துத் தன் கணவனிடம் ஜீவனாம்சமும் பெற்று வரலாமென்பதைத் தான் இப்புதுச் சட்டம் வியக்தமாகக் குறிப்பிடுகின்றது.

இச்சட்டப்படி கீழேகண்ட ஏழு காரணங்களில் ஏதாவது ஒன்றோ, பல காரணங்களோ இருந்தாலும், இந்து மனைவி கணவனிடம் கூட வசிக்காமல், தனியே வசிக்கலாம்; தன் ஜீவனத்திற்கு வேண்டிய தொகையையும் அக் கணவனிடமே பெற்றுவரவும் அவளுக்கு உரிமை உண்டு. அவையாவன:- (1) கணவன் அருவருப்பான வியாதியால் (Loathsome disease) பீடிக்கப்பட்டிருந்தாலும் — ஆனால் இவ்வியாதி மனைவியிடமிருந்து கணவனுக்குப் பரவியதாக இருக்கக் கூடாது; (2) கணவனுடன் வசித்து வருவது ஆபத்தானது அல்லது விரும்பத் தக்கதல்ல என்று ஏற்படும்படி, மனைவியிடம் கணவன் குரூர நடத்தையுள்ளவனாக இருந்தாலும்; (3) மனைவியின் சம்மதமோ, விருப்பமோ இல்லாமல் மனைவியைக் கணவன் கைவிட்டு விட்டாலும் (desertion); (4) கணவன் மறுபடியும் மணம் செய்து கொண்டாலும் (5) கணவன் இந்து மதத்தைவிட்டு வேறு மதத்தைத் தழுவினாலும் (6) கணவன் தன் வீட்டிலேயே ஒரு வைப்பு வைத்துக் கொண்டிருந்தாலும் அல்லது ஒரு வைப்பு ஸ்திரீயுடன் வழக்கமாக வசித்து வந்தாலும் (7) வேறு நியாயமான காரணங்கள் இருந்தாலும் — மனைவி தனியே வசித்து வரவும் கணவனிடம் ஜீவனாம்சம் பெற்று வரவும் உரிமை உள்ளவளாகின்றாள். ஆனால் மனைவியானவள் (1) துர்நடத்தையுள்ளவளாக இருந்தா

தாலும் (2) இந்து மதத்தைவிட்டு வேறு மதத்தை அவள் தழுவினாலும் (3) கணவனுடன் சேர்ந்து வசிக்க வேண்டுமென்று ஏற்பட்டிருக்கும் கோர்ட் டிக்ரிப்படி (தகுந்த காரணங்கள் இல்லாமல்) அவள் நடக்கத் தவறினாலும் அவள் இச் சட்டத்தில் கண்ட உரிமைகளை இழப்பாள்.

மேலேகண்ட காரணங்களில் காரணம் (4) காரணம் (7) இவை இரண்டைப் பற்றியும் இவ்வழக்கில் நீதிபதி அவர்கள் அபிப்பிராயம் கொடுக்க வேண்டியதாயிற்று. 'கணவன் மறுபடியும் மணம் செய்துகொண்டால்' என்று இருப்பது இச்சட்டம் வந்த தேதிக்குப் பின் நடந்த மணத்தைக் குறிக்குமா அல்லது சட்டத் தேதிக்கு முன்பே நடந்த மணத்தைக் குறிக்குமா என்ற பிரச்னை எழுந்தது. இவ்வழக்கில், 1946-க்கு முன்பே சித்த ஷெட்டிக்கு இரண்டு மனைவிகள் உண்டு. இவர் இரண்டாவது மனைவியை மணம் செய்து கொண்ட பிறகு, முதல் மனைவியுடன் ராஜியாகப் போய் அவளையும் தம் கூடவே வைத்துக் கொண்டு குடும்பம் நடத்தினர். ஆனால் முதல் மனைவிக்கும் இரண்டாவது மனைவிக்கும் ஒத்துக் கொள்ளவில்லை. இரண்டாவது மனைவியானவள் தனியாக வசித்து கணவனிடம் ஜீவனாம்சம் கிடைக்க கணவன் மீது தாவா செய்தாள். இவ்வழக்கைக் கடைசியில் விசாரித்த சென்னை ஹைகோர்ட்டார் மனைவியின் தாவாவைத் தள்ளி விட்டனர்.

'கணவன் மறுபடியும் மணம் செய்து கொண்டால்'—மனைவி தனியே வசிக்கவும் தனி ஜீவனாம்சம் பெறவும் உரிமை உண்டென்று இருப்பது, முதல் மனைவியைத்தான் குறிப்பிடும்; அதாவது இரண்டு மனைவிகளில் முதலில் மணம் செய்து கொண்ட ஸ்திரீக்குத்தான் மேற்கண்ட உரிமை ஏற்படுமே ஒழிய பிறகு மணம் செய்து கொண்ட ஸ்திரீக்கு இச்சட்டம் அவ்வுரிமையைக் கொடுக்கவில்லை என்று உயர்நீதிபதி அவர்கள் அபிப்பிராயப்பட்டனர். ஒருவருக்கு இரண்டு மனைவிகள் இருந்தால் எந்த மனைவிக்கும் இந்த உரிமை உண்டென்ற வாதத்தை நீதிபதி அவர்கள் ஏற்கவில்லை. மேலும் இச்சட்டம் அமுலுக்கு வந்த தேதியாகிய 4-5-1946க்குப் பின் ஒருவர் இரண்டாவது மணம் செய்துகொண்டால் தான். முதல் மனைவிக்கு இச்சட்டம் மேற்கண்ட உரிமைகளைக் கொடுக்குமென்றும், சட்டம் வருவதற்கு முன்பே ஒருவர் இரண்டு மனைவிகளையும் மணம் செய்து கொண்டிருந்தால் ஒருவருக்கும் அக்காரணத்தால் தனி ஜீவனாம்சம் அடையும் பாத்தியம் ஏற்படாதென்பதும் இவ்வழக்கில் தீர்ப்பளித்த உயர் நீதிபதி கிருஷ்ணசாமி நாயுடு அவர்களின் அபிப்பிராயம். இச்சட்டம் வருவதற்கு முன்பே ஒருவர் இரண்டு மனைவிகளை மணம் செய்துகொண்டிருந்தாலும், இரண்டாவது மனைவிக்கு இச்சட்ட உரிமைகள் உண்டென்று முன்பு ஒரு வழக்கில் (1950 (1) மதராஸ் லா ஜர்னல் 63) உயர் நீதிபதி விசுவநாத சாஸ்திரி அவர்கள் ஒரு தீர்ப்பு அளித்திருக்கின்றனர். அவ்வபிப்பிராயத்தை இவ் வழக்கில் உயர் நீதிபதி அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை.

வேறு நியாயமான காரணங்கள் இருந்தாலும் மனைவி தனியே வசித்துவரலாமென்பதும், இவ்வழக்கின் வாதிக்குப் பொருந்தாதென்றும், முதல் மனைவியுடன் தான் கூட இருப்பது முடியாதென்பது ஒரு நியாயமான காரணம் அல்ல என்றும், இவ்வழக்கில்நீதிபதி அவர்கள் அபிப்பிராயப்பட்டிருக்கின்றனர்.

சட்ட விரோதமாக வசூல் செய்யப்பட்ட விற்பனை வரித் தொகையைச் சர்க்காரிடமிருந்து திருப்பி வாங்கத் தாவா செய்யலாமா? காலாவதி என்ன?

இவ்விரண்டு பிரச்னைகளைப் பற்றியும் சென்னை ஹைகோர்ட் C. M. A. No. 583 of 1950 நம்பரில் 17-3-1953ல் உயர் நீதிபதி பஞ்சாபகேசய்யர் அவர்கள் தீர்ப்பளித்திருக்கின்றனர். சட்ட விரோதமாக வசூல் செய்யப்பட்ட விற்பனை வரியைத் திருப்பி வாங்க மூன்று வருடங்களுக்குள் தாவா செய்யலாமென்றும் விற்பனை வரிச் சட்டத்தின் செக்ஷன் 18ல் இருப்பதும் சரி, காலாவதிச் சட்டத்தின் ஆர்ட்டிகிள் 16ல் இருப்பதும் சரி, மேற்கண்ட விதம் தாவா செய்யத் தடை யாகாதென்றும் நீதிபதி அவர்கள் இவ்வழக்கில் தீர்ப்பளித்திருக்கின்றனர்.

இது சுத்தக்கிரயமா அல்லது அடமானமா? சென்னை ஹைகோர்ட் தீர்ப்பு.

[ஆதாரம்:- 1953 (1) மதராஸ் லா ஜர்னல்—667]

அடிக்கடி சந்தேகம் ஏற்பட்டு வரும் சட்டப் பிரச்னையை, இவ்வழக்கில் சென்னை ஹைகோர்ட் பிரதம நீதிபதி ராஜமன்னர் அவர்களும் உயர் நீதிபதி வெங்கடராவய்யர் அவர்களும் முடிவு செய்தனர்.

சூரியப்பிரகாச ராவ் வகையரு 20-1-1932-ல் வெங்கட்ராம ராஜுவுக்கு சில சொத்துக்களைச் சுத்தக்கிரய சாசனம் செய்து கொடுத்தனர். அதே தினத்தில் சொத்தைக் கிரயம் வாங்கியவர் அதை விற்றவருக்கே திரும்ப விற்பனை செய்து விடுவதாக ஒப்புக்கொண்டு ஒரு தனி 'எக்கிரிமெண்ட்' எழுதிக் கொடுத்தார். உண்மையில் தம் சொத்துக்களை அடமானமாகத் தான் வைத்ததாகவும் இவ்விரண்டு தஸ்தாவேஜுகளும், அதாவது கிரயப் பத்திரமும், தனி எக்ரிமெண்ட்டும் சேர்ந்து ஒரு அடமானமாகத் தான் பாவிக்கப்பட வேண்டுமென்றும், அடமானத்தைத் தாங்கள் மீட்க உரிமை உள்ளவர்களென்றும் கிரயம் செய்து கொடுத்தவர்கள் 1947ல் தாவாசெய்தனர்.

இவை இரண்டும் ஒரே தேதியில் எழுதப் பட்டிருந்தாலும் இக் கிரயப்பத்திரத்தை அடமானம் என்று பாவிக்கச் சட்டம் இடங் கொடுக்காதென்று வாதியின் தாவா சப்கோர்ட்டால் தள்ளப்பட்டது. அதன் பேரில் ஏற்பட்ட ஹைகோர்ட் அப்பீலும் அத்தீர்ப்பே சரி என உயர் நீதிபதிகள் அபிப்பிராயப் பட்டனர்.

ஏனென்றால் சொத்து மாற்றல் சட்டத்தில் (Transfer of Property Act) பலவகை அடமானங்களைப்பற்றி வர்ணிக்கும் செக்ஷன் 58 (c) ஷரத்தின் வாசகம் வேறு தினுசாக இருக்கிறது. அதாவது, அடமானம் வைப்பவர் வெளிப் பார்வைக்கு ஒரு கிரயப்பத்திரம் எழுதிக் கொடுத்து, ஒரு குறிப்பிட்ட தேதிக்குள் தொகை கொடுக்கப்படாவிட்டால் அக்கிரயம் உறுதியாகி விடும் என்றோ, அல்லது குறிப்பிட்ட தேதிக்குள் தொகை கொடுக்கப்பட்டு விட்டால் அக்கிரயம் ரத்தாகி விடுமென்றோ, அல்லது அத்தொகையைக் கிரயம் செய்பவர் ஒரு கெடுவுக்குள் கிரயம் பெற்றவரிடம் கொடுத்தால், கிரயம் பெற்றவர் சொத்துக்களை மறுசாசனம் செய்து கொடுக்க வேண்டுமென்றோ அக்கிரயப் பத்திரத்தில் நிபந்தனைகள் கண்டிருந்தால், அது ஒரு வகை அடமானமாகும் என்றும்; ஆனால் மேற்கண்ட நிபந்தனைகள் அதே கிரயப்பத்திரத்திலேயே எழுதப்பட்டிருக்க வேண்டுமென்றும் அப்படி அதே பத்திரத்தில் மேற்கண்ட நிபந்தனைகள் எழுதப்படாத எந்தக் கிரயசாசனத்தையும் ஒரு அடமானமாகப் பாவிக்கக் கூடாதென்றும் அந்த ஷரத்தில் வியக்தமாக இருக்கிறது.

அதாவது, கிரயப் பத்திரத்திலேயே, அச் சொத்துக்களைத் திரும்பக் கொடுத்துவிட வேண்டுமென்ற நிபந்தனை எழுதப் படாவிட்டால் அக்கிரயசாசனம், கிரய சாசனமாகவே தான் பாவிக்கப்பட வேண்டுமென்றும், அதை ஒரு நாளும் அடமானமாகப் பாவிக்க முடியாதென்றும்; திருப்பிக் கொடுப்பது பற்றிய தனி எக்ரிமெண்ட்டானது அதே தேதியில் ஏற்பட்டிருந்தாலும் உபயோகமில்லை என்றும் உயர் நீதிபதிகள் அபிப்பிராயப்பட்டு, தீர்ப்பளித்திருக்கின்றனர்.

அதாவது கிரயச்சொத்தைத் திருப்பித் தருவதாகக் கண்டிருக்கும் தனி எக்ரிமெண்டைக் காலாவதிக்குள் வற்புறுத்தி, சொத்துக்களை வேண்டுமானால் திரும்ப வாங்கமுடியுமே ஒழிய, கிரய பத்திரமும் தனி எக்ரிமெண்டும் சேர்ந்து ஒரு அடமானமாக ஏற்படும் என்று பாவித்து அடமானத் தேதியிலிருந்து அறுபது வருடங்களுக்குள் அடமானச் சொத்தை மீட்டுக் கொள்ளுவது முடியாது என்பது இத்தீர்ப்பிலிருந்து வியக்தமாகின்றது.

உ

ஸ்ரீ மகாலெக்ஷிமி துணை

திருக்காட்டுப்பள்ளியில்

பஸ் ஸ்டாண்டுக்கு சமீபத்திலுள்ள

ஸ்ரீ திருச்சி கபே

ஹோட்டலில் கை தேர்ந்த

பிராமணர்களைக் கொண்டு தயாரிக்கப்பட்ட ருசிகரமான இனிப்பு பக்ஷணங்களும்

இனிமையான குளிர்ந்த பானங்களும் கிடைக்கும்

டீ பார்ட்டி, டின்னர் பார்ட்டிகளுக்கு ஆர்டரின் பேரில் குறித்த காலத்தில் சப்ளை

செய்யப்படும். ஒருமுறை விஜயம் செய்யவும்.

சென்னை கிராமப் பஞ்சாயத்துச் சட்டம் – 1950

[The Madras Village Panchayats Act—1950. 1950-ஆம் வருடத்திய 10-ஆவது சென்னைச் சட்டம். சென்னைச் சட்ட மன்றத்தால் நிறைவேற்றப்பட்டது. 15—7—50-ல் ஜனாதிபதி அவர்களின் அங்கீகாரம் பெற்றது. 1—8—1950 தேதியுள்ள சென்னைச் சர்க்கார் கெஜட்டில் பிரசுரம் செய்யப்பட்டது. 1—4—1951 முதல் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டது. பஞ்சாயத்துச் சட்டம், அது சம்பந்தமான விதிகள், சர்க்கார் அறிக்கைகள் முதலியவைகள் எல்லாவற்றையும் சேர்த்து 1952 பிப்ரவரி மாத "வக்கீல்" இதழ் முதல் தொடர்ச்சியாகவும் விவரமாகவும் விளக்கம் செய்யப்பட்டு வருகிறது.]

சென்ற மாத இதழில், சொந்த மார்க்கெட்டுகளைப் பற்றியும், சொந்தமார்க்கெட் காரர்கள் வைத்துக் கொள்ள வேண்டிய கணக்குகள், அவர்கள் கொடுக்கவேண்டிய ரசீது, டிக்கெட் இவை பற்றியும், பொது வண்டி ஸ்டாண்டுகளை ஏற்படுத்துவது பற்றியும், ஆடுமாடுகள் அடிக்கும் பொது இடங்கள் ஏற்படுத்துவது பற்றியும் விளக்கப்பட்டது. இனி பஞ்சாயத்து எல்லைக்குள் நடத்தக்கூடிய கைத்தொழில்களைப் பற்றியும் தொழிற்சாலைகளைப் பற்றியும் பஞ்சாயத்துச் சட்டத்திலுள்ள ஷரத்துக்களை கவனிப்போம்.]

கைத்தொழில்களும் தொழிற்சாலைகளும். எந்த எந்த காரியங்களுக்கு லைசென்சு வேண்டும்.

பஞ்சாயத்தானது, இதற்காக சர்க்காரால் குறிப்பிடப் படும் அதிகாரியின் அனுமதியை முன்னதாகவே பெற்றுக் கொண்டு, கீழே கண்டபடி விளம்பரம் செய்யலாம்.

செக்ஷன் 91

அதாவது, இது விஷயமாகச் செய்யப்படும் விதிகளில் குறிப்பிடப்பட்டிருக்கும் எந்தக் காரியங்களுக்காகவும் அப்பஞ்சாயத்து எல்லைக் குள்ளிருக்கும் எந்த இடத்தையும் பஞ்சாயத்தின் நிர்வாக அதிகாரியால் கொடுக்கப்படும் லைசென்சு இல்லாமலும், அவ்வித லைசென்சில் கண்ட நிபந்தனைகளுக்கு முரணாகவும் உபயோகிக்கக் கூடாதென்று மேற்கண்டபடி விளம்பரம் செய்யலாம். மனித உயிருக்கோ, ஆரோக்கியத்திற்கோ அல்லது சொத்துக்களுக்கோ, கெடுதி அல்லது, அபாயம் விளைவிக்கக் கூடியவை என்று சர்க்கார் அபிப்பிராயப் படும் காரியங்களைத் தான் மேற்கண்ட விதிகளில் குறிப்பிடுவார்கள்.

மேலே கண்டபடி பஞ்சாயத்தானது விளம்பரம் செய்தால், அவ்விளம்பரமானது பிரசுரம் செய்யப்படும் தேதியிலிருந்து குறைந்தது 60 நாட்களுக்குப் பின்பு தான் அமுலுக்கு வரும். அதாவது அவ்விளம்பரம் அமுலுக்கு வரவேண்டிய தேதிக்கு 60 நாட்களுக்கு முன்பே விளம்பரம் செய்யப்படவேண்டும்.

இவ்விஷயம் சம்பந்தமாக சர்க்காரால் விதிகளும் இயற்றப்பட்டிருக்கின்றன. அவை விபரம்:—

27-3-1951 தேதி சென்னை சர்க்கார் கெஜட்-ரூல் சப்ளிமெண்ட்-பாகம் IA-பக்கம்-59

பஞ்சாயத்தானது, மேற்கண்டபடி விளம்பரம் செய்ய, பிரதேச இன்ஸ்பெக்டரின் (ரீஜனல் இன்ஸ்பெக்டரின்) முன் அனுமதியைப் பெற வேண்டும். கீழே கண்டிருக்கும் காரியங்களுக்காக பஞ்சாயத்து எல்லைக்குள் எந்த இடத்தையும் செக்ஷன் 91-ன்படி லைசென்சில்லாமல் உபயோகிக்கக் கூடாதென்று அவ்விளம்பரத்தில் இருக்கவேண்டும். அவை

யாவன:—(a) சூடன் காய்ச்சுவது. (b) கந்தகம் அல்லது கொழுப்பு உருக்குவது (c) குப்பை, ரத்தம், எலு ்பு, தோல், மீன் இவற்றை சேர்த்து வைப்பது அல்லது அவைகளை வேறு விதமாக பக்குவம் செய்வது (d) தோல் பதனிடுவது. (e) ஆட்டு ரோமம், மயிர் இவற்றைக் கழுவுவது, காயவைப்பது. (f) மீன் எண்ணெய் செய்வது (g) சோப் செய்வது, (h) ஜெவ்வரிசி செய்வது; செயற்கை எரு செய்வது; சர்க்கரை காய்ச்சுவது அல்லது சுத்தம் செய்வது; வெல்லம் கற்கண்டு அல்லது ஷர்பத் காய்ச்சுவது; (ஆனால் மரம் ஏறுபவர்கள் அல்லது மரங்களை அனுபவிப்பவர்கள் தங்களுடைய சொந்த இடங்களில் இவற்றைக் குடிசைத் தொழிலாக நடத்த லைசென்சு வேண்டியதில்லை.) பீடி, சிகார் செய்வது (i) துப்பாக்கி மருந்து அல்லது வாண மருந்து செய்வது (j) கல், ஓடு, சட்டிப்பானை அல்லது சுண்ணாம்பு சுடுவது. (k) ஹோட்டல். சிற்றுண்டிச் சாலை, காபி ஹோட்டல், சாப்பாட்டு விடுதி, தங்கும் விடுதி இவைகளை நடத்துவது. (பொதுவாகவோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிர்வாகத்திற்குட்பட்ட மாணவர் ஹாஸ்டல் களுக்கு லைசென்சு தேவையில்லை.) (l) மாவு அரைப்பது, அல்லது மனித உணவுக்காக மாவுப் பண்டங்கள் அல்லது இனிப்புப் பண்டங்கள் செ ்வது (m) ஐஸ், சோடா கலர் இவை செய்வது (n) சாராயம் முதலியவை காய்ச்சுவது (o) மரவியாபாரம் செய்வது அல்லது வியாபாரத்திற்காக மரம் அடுக்கிவைப்பது. (p) சொந்த உபயோகத்திற்கல்லாமல், தானியங்கள், நிலக் கடலை, புளி, மிளகாய், வெல்லம், பருப்பு வகை, மாவு, தவிடு, புண்ணாக்கு, அல்லது எலி வரக்கூடிய வேறு விவசாயச் சரக்குகள் இவைகளில் மொத்த வியாபாரம் செய்வது, சில்லறை வியாபாரம் செய்வது, அல்லது இவற்றை மொத்த வியாபாரத்திற்காகவோ, சில்லறை வியாபாரத்திற்காகவோ சேகரம் செய்து வைப்பது (q) வெடிக்கக்கூடிய பண்டங்களையும் எளிதில் நெருப்புப் பிடிக்கக் கூடிய பண்டங்களையும் சேகரம் செய்து வைப்பது, (1934-ம் வருடத்திய பெட்ரோலியச் சட்டப்படி அல்லது விதிகளின்படி அனுமதிக்கப்பட்ட அளவுக்குமேல் உள்ளதற்கு இச்சட்டப்படி லைசென்சு வேண்டியதில்லை (r) பருத்தியை மொத்தமாகவோ சில்லறையாகவோ விற்பது; விற்பனைக்காக சேகரம் செய்து வைப்பது அல்லது நூல் நூற்பதற்காக சேகரம் செய்து வைப்பது (s) துர்நாற்றம் அல்லது ஆரோக்கியத்திற்குக் கெடுதி உண்டாக்கக் கூடிய நாற்றம் ஏற்படும் விதம் எந்தப் பண்டங்களையும் செய்வது (t) உற்பத்தி வேலைகளுக்காக எவ்வித விறகு கரிபோன்ற வஸ்துக்களையோ, யந்திரங்களையோ உபயோகிப்பது; (சில யந்திரங்களுக்கு சர்க்கார் அவ்வப்பொழுது விதிவிலக்கு அளிக்கலாம்.) ஆனால் சொந்த உபயோகத்திற்காக விறகு, கூறை போடக்கூடிய சாமான்கள், வைக்கோல், புல், கரி, இவற்றை சேகரம் செய்யவும் நெல் புழுங்க வைக்கவும் யாதொரு லைசென்சும் வேண்டியதில்லை. மேலும் 1939-ம் வருடத்திய சென்னைப் பொது சுகாதாரச் சட்டப்படி பதிவு செய்து கொள்ளப்பட்ட தங்கும் விடுதிகளுக்கு இச்சட்டப்படி லைசென்சு வேண்டியதில்லை.

தொழிற்சாலைகளைக் கட்டவும், யந்திரங்களை ஸ்தாபிக்கவும் பஞ்சாயத்தின் அனுமதி வேண்டும்.

செக்ஷன் 92

பஞ்சாயத்தின் அனுமதியின்றியும், அனுமதியில் கண்ட நிபந்தனைகளுக்கு முரணாகவும் எவரும் (a) நீராவி, ஜலசக்தி, அல்லது வேறு யந்திரசக்தி அல்லது மின்சார சக்தியைக் கொண்டு நடத்த வேண்டிய தொழிற்சாலையையே, வேலை செய்யும் இடத்தையோ கட்டவும் ஸ்தாபிக்கவும் கூடாது (b) அவ்வித இடங்களில் மேலே கண்ட எவ்வித சக்தியால் ஓடும் யந்திரங்களையோ உற்பத்தி சாதனங்களையோ நிறுவவும் கூடாது. ஆனால் விதிகளின் மூலம் எவ்வித யந்திரங்களைப் பற்றியும் அல்லது உற்பத்தி சாதனங்களைப் பற்றியும் விதி விலக்கு அளிக்கலாம்.

விதி விலக்குகள்

மேலே செக்ஷன் 92ல் கண்ட ஷரத்துக்களிலிருந்து கீழே கண்டவைகளுக்கு விதி விலக்கு அளிக்கப்பட்டிருக்கின்றன. அதாவது கீழே கண்டவைகளுக்கும் பஞ்சாயத்தின் அனுமதி தேவையில்லை. அவையாவன:—(1) சொந்த உபயோகத்திற்காகவோ அல்லது சொந்த சௌகரியத்திற்காகவோ உத்தேசிக்கப்பட்டிருக்கும் மின்சார (எலெக்ட்ரிக்) சாதனங்களும் யந்திரங்களும் (2) சொந்த உபயோகத்திற்காகவோ அல்லது சொந்த சௌகரியத்திற்காகவோ உத்தேசிக்கப்பட்டிருக்கும் இரண்டு குதிரை சக்திக்கு அதிகப்படாத எலெக்ட்ரிக் அல்லாத சாதனங்களும் யந்திரங்களும். (3) உண்மையாக விவசாயத்திற்கு உபயோகிக்கப்படும் எலெக்ட்ரிக் மோட்டார் உள்பட எலெக்ட்ரிக் சாதனங்கள். (4) உண்மையாக விவசாயத்திற்கு உபயோகிக்கப்படும் இரண்டு குதிரை சக்திக்கு மேற்படாத எலெக்ட்ரிக் அல்லாத சாதனங்கள் (5) டிரான்ஸ் பார்மர் ஸ்டேஷன்கள் (6) கண்டென்சர் ஸ்டேஷன்கள் (7) ரெக்டிபையர் ஸ்டேஷன்கள்.

27-3-1951 தேதி சர்க்கார் கெஜட் பாகம் 1A ரூல் சப்ளிமெண்ட் பக்கம் 60

மேற்கண்ட யந்திரங்களையும் சாதனங்களையும் வைத்துக்கொள்ள பஞ்சாயத்தின் அனுமதி தேவையில்லை.

லைசென்சு, அனுமதி இவைகளைக் கொடுப்பது, புதுப்பிப்பது பற்றி விதிகள் செய்ய சர்க்காருக்கு அதிகாரம் உண்டு.

(1) கீழே கண்ட விதம் விதிகள் ஏற்படுத்த சர்க்காருக்கு அதிகாரமுண்டு. அதாவது:—(a) செக்ஷன் 91ன் படி லைசென்சு கொடுப்பதையும் புதுப்பிப்பதையும் தடுத்தும் ஒழுங்கு படுத்தியும், லைசென்சுகள் அமுலில் இருக்க வேண்டிய கால அளவை நிர்ணயம் செய்தும் விதிகள் ஏற்படுத்தலாம். (b) லைசென்சு வாங்கவோ, புதுப்பிக்கவோ மனுக்கள் எந்த கெடுவுக்குள் போடவேண்டுமென்பதைப்பற்றி விதிகள் ஏற்படுத்தலாம். (c) செக்ஷன் 92-ன்படி அனுமதி கொடுப்பதைத் தடுத்தும் ஒழுங்குபடுத்தியும் விதிகள் ஏற்படுத்தலாம். (2) மேலே 1 (c) உட்பிரிவின்படி ஏற்படும் விதிகளில், பஞ்சாயத்து எல்லைக்குள் குறிப்பிட்ட இடங்களை மட்டில் கைத்தொழில் சாலைகளுக்காக ஒதுக்கும் அதிகாரத்தைப் பஞ்சாயத்துக்களுக்குக் கொடுக்கலாம். அப்படி ஒதுக்கப்பட்ட இடங்களுக்கு வெளியே தொழிற்சாலைகள் ஏற்படுவதைத் தடுக்கவும்: ஏற்கனவே அவ்வித இடங்களுக்கு வெளியே ஸ்தாபிக்கப் பட்டிருக்கும் தொழிற் சாலைகளையும் யந்திரங்களையும் ஒதுக்கப்பட்ட இடத்திற்குள் கொண்டு போகவும் (இது மட்டில் விதிகளால் நிர்ணயிக்கப்படும் அதிகாரியின் அனுமதியின் பேரில் செய்யப் படவேண்டும்) பஞ்சாயத்துக் களுக்கு அதிகாரம் கொடுக்கலாம்.

செக்ஷன் 93

ஆனால் மத்திய சர்க்காருக்கோ, ராஜ்ய சர்க்காருக்கோ சொந்தமான தொழிற்சாலைகளையோ அல்லது 1933-ம் வருடத்திய சென்னை வியாபார விளை பொருள் மார்கெட் சட்டப்படி ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் மார்கெட்டுக்களையோ வேறு இடத்திற்கு மாற்றும்படி இவ்விதிகள் பஞ்சாயத்துக்களுக்கு அதிகாரம் கொடுக்கக் கூடாது. (3) செக்ஷன் 91 அல்லது செக்ஷன் 92-ன் படி செய்யப்படும் எந்தக் காரியங்களைப்பற்றியும் அல்லது அவைகளின்படி செய்யத் தவறிய விஷயங்களைப் பற்றியும் பொதுவாகவோ குறிப்பாகவோ எவ்வித உத்தரவுகள் செய்யவும் சர்க்காருக்கு அதிகாரம் உண்டு.

பொதுஜனங்கள் கூடும் இடங்களைப் பற்றிய 1888-ம் வருடத்திய சட்டத்தைப் பிரயோகப்படுத்தலாம்.

1888-ம் வருடத்திய பொது ஜனங்கள் கூடும் இடங்களைப் பற்றிய சட்டத்தை

செக்ஷன் 94

சர்க்கார் எந்த பஞ்சாயத்துக்கு விஸ்தரித்தால், அச்சட்டத்தில் எப்படி இருந்த போதிலும், (a) சினிமா தவிர வேறு காரியங்களுக்கு எந்த இடத்தையோ கட்டடத்தையோ உபயோகிக்க லைசென்சு கொடுக்கப் பஞ்சாயத்து நிர்வாக அதிகாரிக்கு மனுப் போடவேண்டும். லைசென்சுக்காக போடப்படும் மனுவை நிராகரிக்கவும் லைசென்சு கொடுக்கவும் பஞ்சாயத்தின் நிர்வாக அதிகாரிக்குத்தான் அதிகாரம். (b) லைசென்சு கொடுத்தோ, கொடுக்க மறுத்தோ, லைசென்சை ரத்து செய்தோ சஸ்பெண்டு செய்தோ நிர்வாக அதிகாரி செய்யும் உத்தரவின் பேரில் பஞ்சாயத்துக்கு அப்பீல் உண்டு.

(தொடரும்)

ஆடைகளை அழகு பெறச் செய்வது

~ அன்னகிளி ~

சோப்

—தயாரிப்பவர்—

சவுத் இந்தியன் சோப் ஒர்க்ஸ்

P. B. No. 38 :: தஞ்சாவூர்

குணம்
மணம்
சுத்தம்
ஆரோக்கியம்
சிக்கனம்
உடையது.

நறுமண சீயக்காய்த்தூள்
REGD. No. 13817.

உரிமை:
S. பெத்தண்ண நாடார்
.. கீழவாசல்-தஞ்சாவூர்..

கல்யாண
பட்டுநூல்
ஜவுளிகளுக்கு

★

ராதா ஸில்க்
எம்போரியம்

★

119, பெரிய தெரு, :: கும்பகோணம்.

விலை மலிவு உத்தரவாதம்

அயல் நாடு உள் நாடு சைகிள்களும், சைகிள் சாமான்களும், ஏராளமாக ஸ்டாக் செய்திருக்கிறோம். அன்பர்கள் ஒரு முறை விஜயம் செய்க.

உமர் சைகிள் மார்ட்,
221, பெரியகடை வீதி,
கும்பகோணம்.

இப்பகுதியில் நமது வாசகர்கள் கேட்கும் சட்ட சம்பந்தமான கேள்விகளுக்கு மட்டில் பத்திரிகையில் இடமிருக்கும் வரை பதில் அளிக்கப்படும். கேள்வி கேட்பவர்கள் தங்கள் சொந்த விவகாரங்களைப்பற்றி எழுதக்கூடாது. சட்டங்களிலோ, விதிகளிலோ ஏற்படக்கூடிய சந்தேகங்களைத் தெளிவுபடுத்திக்கொள்ளும் முறையில்தான் கேள்விகள் இருக்கவேண்டும். கேள்விகள் சுருக்கமாய் இருக்கவேண்டும். ஒவ்வொரு கேள்வியும் தனித்தனியான காகிதத்தில், பதில் எழுத இடம் விட்டு எழுதி அனுப்பவேண்டும். தவிர ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பிரதிகள் அனுப்பவேண்டும். ஒவ்வொரு கேள்வியிலும் குறிப்பிடப்பட்டிருக்கும் சந்தர்ப்பங்களுக்கு மட்டில் தான், அதன் 'பதில்' பொருந்தும். கேள்விகளுக்குச் சொல்லப்படும் பதில் அபிப்பிராயமே. கேள்விகளுக்கு நேரில் பதில் அனுப்புவது இயலாது.

ஒவ்வொரு மாதமும் முதல் தேதி முதல் 10ஆம் தேதிக்குள் அனுப்பப்படும் கேள்விகளுக்குத்தான் அடுத்த இதழில் பதில் சொல்லுவது சாதாரணமாகச் சாத்தியமாகும்.

பஞ்சாயத்து பிரசிடெண்ட் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம்

92, கேள்வி: (சந்தா நெ. *11127*) மைனர் பஞ்சாயத்துப் போர்டு பிரசிடெண்ட் பேரில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வர யாருக்குப் பாத்தியமுண்டு? ஜனங்களா மெம்பர்களா?

பதில்: ஒருவருக்கும் பாத்தியமில்லை. அதாவது முனிசிபாலிட்டிகளுக்கு இருப்பது போல் ஒரு நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மூலம் பஞ்சாயத்துப் பிரசிடெண்டின் பதவிக் காலத்தை முடிவு செய்யக்கூடுமென்ற ஷரத்து எதுவும் பஞ்சாயத்துச் சட்டத்தில் இல்லை. மேலும் பஞ்சாயத்துப் பிரசிடெண்டானவர் மெம்பர்களால் தேர்ந்தெடுக்கப் படுபவரல்ல. வாக்காளர்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுபவர். பஞ்சாயத்து மெம்பர்கள் எல்லோருக்கும் பிடிக்காத ஒருவர் வாக்காளர்களால் பஞ்சாயத்துத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டாலும் பஞ்சாயத்து மெம்பர்கள் ஒன்றும் செய்ய முடியாது, மேலும் பஞ்சாயத்தானது, பஞ்சாயத்துச் சட்டத்தின்படி கலைக்கப் பட்டால்கூட பஞ்சாயத்து மெம்பர்கள் தான் பதவியை இழப்பார்கள். பஞ்சாயத்துத் தலைவர் தம் பதவியை இழக்கமாட்டார். (செக்ஷன் 48-பஞ்சாயத்துச் சட்டம்)

ஆண்மக்களில்லாத இந்துவிடம் இருக்கும் பூர்வீகச் சொத்து

93. கேள்வி: (ஷி) ஒரு இந்து தம் தகப்பனரால் சம்பாதிக்கப்பட்ட சொத்தைத் தம் தகப்பன் உயில் மூலம் அடைந்து, தனக்குப் பின், தற்சமயம்

உயிரோடிருக்கிற ஒரே பெண்ணுக்கும், மற்ற இறந்த பெண்களின் பெண் வாரிசுகளுக்கும் அவர் உயில் எழுதி வைக்கப் பாத்தியமுண்டா? இரண்டாவது உயில் எழுதி வைத்தவர் இறந்து விட்டார்.

பதில்: உயில் எழுதப் பாத்தியமுண்டு. உயில் எழுதிய இந்துவுக்கு ஆண்மக்கள் இருந்தால்தான், அவர் தம்முடைய பூர்வீகச் சொத்தை உயில் மூலம் விநியோகம் செய்ய முடியுமா முடியாதா என்ற பிரச்னை எழும்.

போக்கிய சொத்தில் ஒருவருடைய பாகத்தை மட்டில் மீட்க முடியுமா

94. கேள்வி: (ராமசாமி—சிதம்பரம்) ஒரு இந்து தம்முடைய நிலத்தை வேறு ஒருவருக்கு ரூ. 500க்குப் போக்கியம் வைத்திருக்கிறார். அவர் இறந்து விட்டார். அவருக்கு மூன்று மகன்கள். அம்மகன்களில் ஒருவர் மட்டில் 3இல் 1 பங்குக் கடனைக் கொடுத்து, 3இல் 1 பங்கு நிலத்தை மீட்க முடியுமா? போக்கியதார் அப்படித் தனித் தனியாகப் பிரித்து வாங்கலாமா? அப்படி அவர் வாங்காவிட்டால் கோர்ட்டில் 3 இல் 1 பங்கு தொகை கட்டிச் சொத்தை மீட்கலாமா? அல்லது மூன்று மகன்களும் சேர்ந்துதான் தொகை கட்டி மீட்க வேண்டுமா?

பதில்: ஒரு மகன் மட்டில் போக்கியத்தை மீட்கலாம்; ஆனால் போக்கியத் தொகை ஜாடாவையும் கட்டி, முழு போக்கியத்தையும் மீட்க வேண்டும். தம் வீதக் கடனை மட்டில் கட்டித் தமக்குள்ள பாகத்தை மட்டில் மீட்டுக் கொள்ளச் சட்டம் இடங் கொடுக்கவில்லை. முழுத் தொகையையும் போக்கியதாரிடமும் கொடுத்து, சொத்தை மீட்கலாம்; அல்லது பூராத் தொகையையும் ஒருவரே கோர்ட்டில் கட்டியும் பூராச் சொத்தையும் மீட்டுக் கொள்ளலாம். மற்ற மகன்கள் இப்படிச் செய்ய இஷ்டப்படா விட்டாலும் ஒருவர் மட்டில் மீட்கலாம். (சொத்து மாற்றல் சட்டம் செக்ஷன் 60)

குத்தகை சொத்து

95. கேள்வி: (சந்தா நெ. 10417) இந்துக் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர் சில நிலங்களைக் கிரயத்திற்கு வாங்கி இறந்து விட்டார். அவருக்கு மூன்று மகன்கள். இரண்டு மகன்கள் வெளியில் புறப்பட்டுப் போய் 25 வருடங்கள் ஆகிவிட்டன. மூன்றாவது மகன் ஷை நிலத்தை குத்தகைக்கு 5 வருடக் கெடுவுக்கு வெற்றுக் காகிதத்தில் முச்சலிக்கா எழுதி வாங்கிக் கொண்டு அவரும் புறப்பட்டுப்போய் 12 வருடங்கள் ஆகின்றன. ஷை சொத்தைக் கிரயதாரருடைய தம்பியும், அண்ணன் பிள்ளைகளும் விக்கிரயம் செய்துவிட்டார்கள். முச்சலிக்கா எழுதிக் கொடுத்தவர் சொத்து எனக்கே பாத்யம் என்று சொல்லுகிறார். சொத்து முச்சலிக்காதாரருக்குச் சேருமா அல்லது கிரயதாரருக்குச் சேருமா? குத்தகை முச்சலிக்கா எழுதிக் கொடுத்து இன்னும் 12 வருடங்கள் பூர்த்தியாக வில்லை.

பதில்: குத்தகைக்கு விட்ட சொந்தக்காரர் இறந்து விட்டார் என்று ஏற்படும் வரையில், அச்சொத்து வேறு ஒருவருக்கும் சொந்தமாகி விடாது.

ஜாதிப்பிரஷ்டம்

96. கேள்வி: (சந்தா நெ. 10513) ஒரு இந்துக் குடும்பத்தில் புதியதாக ஒரு விதவைத் திருமணம் செய்கிறார்கள். இத் திருமணத்தை அச் சமூகத்தினர் பலர் ஆட்சேபிக்கிறார்கள். திருமணம் நடந்து விட்டது. பெரும்பான்மையானவர்கள் ஷை திருமணம் செய்தவர்களையும் அவர்கள் உறவினர்கள், திருமணத்திற்கு உதவிய அதே சமூகத்தினர் இவர்களையெல்லாம் ஜாதி ஆசார வழக்கப்படி ஜாதிப் பிரஷ்டம் செய்து விட்டனர். புதிய அரசியல் சட்டப்படி ஜாதிப் பிரஷ்டம் செய்வது குற்றமற்றதா? குற்றமானதா? ஜாதிப் பிரஷ்டம் செய்தவர்கள், அவர்கள் சொற்படி அதை அமுல் செய்யும் சமூக மக்கள் இவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்க வழி உண்டா?

பதில்: ஜாதிப் பிரஷ்டம் செய்வது என்பது ஒரு குற்றமாகாது. அப்படிச் செய்பவர்கள் மீது நடவடிக்கை எதுவும் எடுத்துக் கொள்ள முடியாது. புதிய அரசியல் சட்டத்தில் அதைத் தடுக்கும் ஷரத்து ஒன்றுமில்லை.

ஈட்டுப் பத்திரத்தை வேறு ஒரு வருக்கு மாற்ற

97. கேள்வி: (துரைசாமி—பழனி) ஒரு பூமியில் ஒருவருடைய பெயருக்கு இருக்கும் ஈட்டு பத்திரத்தை மற்றவர் பெயருக்கு மாற்றவேண்டுமானால், புரோநோட்டை மேடோவர் எழுதி வாங்குவதுபோல் வாங்கலாமா? அல்லது சப்ரிஜிஸ்டர் ஆபீசில் போய்ப் பதிவு செய்து மாற்றவேண்டுமா?

பதில்: ஸ்தாவர சொத்து சம்பந்தமான ஈட்டு பத்திரத்தை வேறு ஒருவருக்கு மாற்றச் சரியான ஸ்டாம்பில் ஒரு 'டிரான்சுபர்' பத்திரம் எழுதி, அதை ரிஜிஸ்டரும் செய்யவேண்டும். இல்லாவிட்டால் செல்லாது. பிராமிசரி நோட்டை 'மேடோவர்' செய்வதுபோல் அதிலேயே எழுதினால் போதாது.

கேசரிப் பருப்பு

98. கேள்வி: (பெரிய கறுப்ப நாடார்—தூத்துக்குடி) கேசரிப்பருப்பை, சென்னை ராஜ்யத்தில் விற்பனை செய்வதுபற்றி ஏதாவது தடை உண்டா?

பதில்: சென்னைக் கலப்புத் தடைச் சட்டப்படி ஏற்பட்டிருக்கும் விதிகளில் (Madras Prevention of Adulteration Rules) விதி 28 E இன்படி கேசரிப் பருப்பையோ (Kesari dhall or Lak Dhall) அதன் சரக்குகளையோ, கேசரி மாவையோ, வேறு பருப்பு அல்லது மாவுடன் கேசரிப் பருப்பு அல்லது கேசரி மாவைக் கலந்தோ, எவரும் விற்பனை செய்யக்கூடாதென்றும், விற்பனைக்காகத் தம் வசம் வைத்திருக்கக் கூடாதென்றும் 8-5-1953 தேதியுள்ள சென்னைச் சர்க்கார் G. O. 1758 மூலம் ஒரு தடை இருக்கிறது. (27-5-1953 தேதியுள்ள சென்னைச் சர்க்கார் கெஜட்—ரூல் சப்ளிமெண்டு—பாகம் I A-பக்கம் 79 பார்க்கவும்.)

பஞ்சாயத்து தேர்தலில் பகிரங்க 'வோட்' முறை

99. கேள்வி: (கிருஷ்ணசாமி—ஆத்தூர்.) முதல் வகுப்புப் பஞ்சாயத்துக்கு ரகசிய 'வோட்' முறையும், இரண்டாவது வகுப்பு பஞ்சாயத்துக்குக் கைதூக்கும் முறையும் உண்டாக்கப்பட்டது ஏன்? இரண்டாவது வகுப்புப் பஞ்சாயத்துக்களில் சம்பந்தப்பட்ட வார்டு 'வோட்டர்கள்' எல்லாம் கூடி கக்ஷி வாதங்கள் பேசி, வீண் சச்சரவு உண்டாவதுடன், ஆடு மாடுகள்போல் அடைக்கப்பட்டு 'வோட்டர்கள்' எண்ணப்படும் முறையை மாற்றி அவர்களுக்கும் ரகசிய வோட் மூலம் தேர்தல் நடத்துவதை சர்க்கார் ஏன் செய்யவில்லை?

பதில்: புதிய பஞ்சாயத்துச் சட்டத்தின்படி ஏற்பட்ட விதிகளில், முதலில் எல்லாப் பஞ்சாயத்துக்களுக்கும் ரகசிய வோட் முறைதான் விதிக்கப்பட்டிருந்தது. ஆனால் ரகசிய வோட் முறைப்படி தேர்தல் நடத்த ஏராளப் பணச் செலவு ஆகும். ஒவ்வொரு அபேட்சகருக்கும். தனித்தனி வோட்டுப் பெட்டி, பாலட் பேபர் என்ற வாக்குச் சீட்டுகள், ரகசிய அறை, அதிக அதிகாரிகள், சிப்பந்திகள், எல்லாம் ரகசிய முறைத் தேர்தலுக்கு வேண்டும். ஏராளச் செலவாகும். கைதூக்கும் பகிரங்க முறையில் இவை ஒன்றும் கிடையாது. ஒரே இடத்தில் வாக்காளர்கள் கூடி, ஒரே அதிகாரியே தேர்தலை நடத்தி விடலாம். செலவை உத்தேசித்துத்தான் சர்க்கார் இரண்டாவது வகுப்பு பஞ்சாயத்துக்களுக்கு ரகசிய முறை 'வோட்' வேண்டியதில்லை என்று இப்போது விதிகளை மாற்றி அமைத்திருக்கின்றனர். தேவையான இடங்களில் இரண்டாம் வகுப்புப் பஞ்சாயத்துக்களிலும் ரகசிய முறைப்படி தேர்தலை நடத்தும் அதிகாரத்தை சர்க்கார் வைத்துக் கொண்டிருக்கின்றனர்.

இந்துச் சட்டம்—இரண்டு விதவைகள்—ஒருவர் எடுக்கும் சுவீகாரம்

100. கேள்வி: (பழனியப்பன்-கொழும்பு) ஒரு இந்து இரண்டு மனைவிகளை விட்டு விட்டு இறந்து போய்விட்டார். இரண்டு மனைவிகளுக்கும் குழந்தைகள் இல்லை. இறந்தவருடைய சொத்துக்களை இரு மனைவிகளும் பாதிப் பாதியாகப் பிரித்துக் கொண்டனர். அப்படி இருக்கையில்

முதல் மனைவி மட்டில் இரண்டாவது மனைவியைக் கலக்காமல் தனக்கும் இரண்டாவது மனைவிக்கும் சேர்த்து என்று, ஒரு சுவீகார மகனை எடுத்துக் கொண்டாள், இந்துச் சட்டப்படி அது செல்லுமா? இரண்டாவது மனைவி தனக்கென ஒரு மகனை சுவீகாரம் செய்து கொள்ளலாமா? சொத்துக்கள் யாரைச் சேரும்?

பதில்: இறந்த கணவன் தம் இரு மனைவிகளுக்குள் எந்த மனைவிதான் சுவீகாரம் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று ஏதாவது தம் எண்ணத்தைத் தெரிவித்திருந்தாலொழிய, முதல் மனைவிக்குத்தான் சுவீகாரம் செய்து கொள்ளும் உரிமை இருக்கிறது. (45 மதராஸ் 236) சுவிகாரம் என்பது இறந்த கணவனுக்குத்தான். சுவிகாரம் எடுத்துக்கொள்ளும் முதல் மனைவி மட்டில்தான் சுவிகார மகனுடைய தாயாவாள். இரண்டாவது மனைவி சிற்றன்னைதான். முதல் மனைவி இருக்கும்போது அவளுடைய சம்மதம் இல்லாமல் இரண்டாவது மனைவி சுவீகாரம் எடுத்துக்கொள்ள முடியாது. மேலும் முதல் மனைவி சுவிகாரம் செய்து கொண்ட பிறகு, இரண்டாவது மனைவியும் சுவிகாரம் செய்து கொள்ளவே சட்டம் இடம் கொடுக்காது. ஏனென்றால் மகன் இல்லாதவர்களுக்குத்தானே சுவிகாரம் செய்துகொள்ளலாம். முதல் மனைவி சுவீகாரம் செய்துகொண்டவுடன், இறந்த இந்துவுக்கு மகன் தோன்றி விடுவதால், மறுபடியும் ஒருவரும் சுவிகாரம் செய்து கொள்ள முடியாது. முதல் மனைவி சுவிகாரம் செய்துகொண்டவுடன் சொத்துக்களில் பாதி சுவிகார மகனைச் சேரும். பாக்கிப் பாதியை இரண்டு மனைவிகளும் ஆயுள் வரை அனுபவித்து அவர்களுக்குப் பிறகு அச்சொத்தும் சுவிகார மகனைச் சேரும்.

இந்துச் சட்டம் - செட்டில்மெண்ட் எழுதி ரத்து செய்யலாமா?

101. கேள்வி: (ஜானகிராமுலு ரெட்டியார்—திண்டிவனம்.) இந்து புருடன் மனைவிக்குச் சந்ததி இல்லை. மனைவியின் தம்பி மகனை 1925 முதல் அவர் வளர்த்துக் கொண்டு வந்து 1940ல் தம்முடைய சொத்துக்கள் பூராவையும் அப்பிள்ளைக்கு ஒரு செட்டில்மெண்ட் எழுதி வைத்தார். அதில்—"சொத்துக்களை நீயும் நாங்களும் அனுபவித்து வந்து, எங்கள் ஜீவதசைக்குப் பிறகு, நீயே அச்சொத்துக்களை சர்வ சுதந்தரமாய் அடைகிறது"—என்று கண்டிருக்கிறது. அப்பிள்ளைக்குக் கலியாணமும் செய்தார்கள். பிறகு 1950ல் அச்செட்டில்மெண்டை அவர் ரத்துசெய்து வேறு ஒருவருக்கு அதே சொத்துக்களை அன்று முதல் சர்வ சுதந்தரமாகக் கொடுத்து வேறு செட்டில்மெண்ட் எழுதி வைத்தால் — முதல் செட்டில்மெண்ட் செல்லுமா, அல்லது இரண்டாவது செட்டில்மெண்டு செல்லுமா?

பதில்: சாதாரணமாக, சட்டப்படி ஒருவர் எழுதி பூர்த்தி செய்துவிட்ட செட்டில்மெண்டை அவர் ரத்து செய்ய முடியாது இருந்தாலும் சிற்சில சந்தர்ப்பங்களில் எழுதி வைத்தவரே அதை ரத்து செய்துவிடலாம். உதாரணமாக 'இந்த செட்டில்மெண்டை என் இஷ்டப்படி ரத்து செய்ய எனக்கு உரிமை உண்டு'—என்று கண்டு எழுதப்படும் செட்டில் மெண்டுகள் ஆரம்பத்திலிருந்தே செல்லாதவையாகும். மேலும் ஏமாற்றப்பட்டோ, பயமுறுத்தப்பட்டோ, தவறுதலாகவோ, மனதை வசப்படுத்தியோ, ஒருவர் செட்டில்மெண்ட் எழுதி இருந்தால் அதை அவரே ரத்து செய்து விடுவதை சட்டம் அனுமதிக்கின்றது. (சொத்து மாற்றல் சட்டம்—செக்ஷன் 126.) முதல் செட்டில்மெண்ட் செல்லுமா செல்லாதா என்பதை மேற்கண்ட சந்தர்ப்பங்களைக் கொண்டு நிர்ணயம் செய்யவேண்டும்.

பிரிபடாத இந்துக் குடும்பத்தில் ஒருவர் செய்துகொள்ளும் 'இன்ஷ்யூரன்ஸ்'

102. கேள்வி: (T. D. C. ஐயர்—சத்தியமங்கலம்.) ஒரு பிரிபடாத இந்துக் குடும்பத்தில் தகப்பனும், அவருடைய இறந்த மூத்த மனைவியின் மகனும், குழந்தைகளில்லாத அவருடைய இரண்டாவது மனைவியும் இருக்கிறார்கள். பூர்வீகச் சொத்து இருக்கிறது. தவிர தகப்பன் இன்ஷூரன்ஸ் செய்திருக்கிறார். அவனுக்கு பிராவிடெண்டு பண்டுத் தொகையும் வர

வேண்டும். இன்ஸ்யூரன்ஸ, பிராவி டெண்ட்பண்டு இரண்டையும் தம்முடைய இரண்டாவது மனைவி பெயரில் பதிவு செய்திருக்கிறார். அவர் இறந்துவிட்டால், இன்ஷ்யூரன்ஸ் தொகையிலும் பிராவி டெண்டு பண்டுத் தொகையிலும் முதல் மனைவியின் மகனுக்குப் பாத்தியம் உண்டா? பூர்வீகச் சொத்துக்களில் மூத்த மனைவியின் மகனுக்கும், இரண்டாவது மனைவிக்கும் பாத்தியங்கள் எப்படி?

பதில்: பூர்வீகச் சொத்துக்களில் மூத்த மனைவியின் மகனுக்குப பாதி சொத்தும், இரண்டாவது மனைவிக்குப் பாதி சொத்தும் கிடைக்கும். இரண்டாவது மனைவி அதைத் தம் ஆயுள்வரை அனுபவித்து பிறகு அதுவும் மூத்த மனைவியின் மகனைத்தான் சேரும்.

ஆனால் இன்ஷ்யூரன்ஸ், பிராவிடெண்ட் பண்டுத் தொகைகள் இரண்டாவது மனைவிக்குத்தான் கிடைக்கும். இன்ஷ்யூரன்ஸ் தொகை சம்பந்தமாக சென்னை பிரதம நீதிபதி ராஜமன்னார் அவர்களும், உயர் நீதிபதி வெங்கடராமய்யர் அவர்களும் 23-1-1953ல் ஒரு தீர்ப்பு அளித்திருக்கின்றனர். இப்போது இந்து சமுதாயத்தில் ஏற்பட்டிருக்கும் மாறுதல்களை உத்தேசித்து, இன்ஷ்யூரன்ஸ் தொகையானது, இன்ஷ்யூர் செய்து கொண்டவருடைய தனி சொத்தாகவேதான் பாவிக்கப்பட வேண்டுமென்றும், சாதாரணமாய் அத்தொகையானது பொதுக் குடும்பத்தைச் சேராதென்றும்; இருந்தாலும் இன்ஷ்யூர் செய்துகொண்டவர், வியக்தமாக, அத்தொகையைக் குடும்பப் பொது நிதியாக பாவிக்கவேண்டுமென்று அபிப்பிராயப்பட்டிருந்தால்தான், அது குடும்பப் பொது சொத்தாகுமென நீதிபதிகள் அபிப்பிராயப்பட்டிருக்கின்றனர். (*1953 — (1)* மதராஸ் லா ஜர்னல்—குறிப்புகள் பக்கம் *47*—பார்க்கவும்.) இன்ஷ்யூரன்ஸ் தொகையும் அதைப் போலவே பிராவிடெண்ட் பண்டு தொகையும், தகப்பனுடைய தனி சொத்தாகையாலும், அவற்றை அவர் தம் இரண்டாவது மனைவிக்கு எழுதி வைத்து விட்டபடியாலும், அவை இரண்டிலும் மூத்த மனைவியின் மகனுக்கு உரிமை ஏற்படாது.

இந்துச்சட்டம்—வார்சு யார்?

103. **கேள்வி:** (சுப்ரமணியம்—திருமக்கோட்டை) ஆண் சந்ததி இல்லாத ஓர் இந்து, பிதுரார்ஜிதமான சொத்தைத் தம்முடைய மைனர் பெண் குழந்தைகளுக்கு உயில் எழுதி வைத்தார். தம்முடைய மனைவி உயிருடனிருக்கும் வரை அவளுக்கு வருடம் ஒன்றுக்கு இவ்வளவு கொடுக்க வேண்டுமென்றும், குழந்தைகள் மேஜரானதும் சம பாகமாகப் பிரித்துக் கொடுக்க வேண்டுமென்றும், உயிலில் கண்டிருக்கிறது. உயில் எழுதியவர் இறந்துவிட்டார். ஒரு பெண்ணைத் தவிர மற்றப் பெண்கள் மேஜராவதற்கு முன்பே இறந்து விட்டன. ஒரு பெண்ணுக்கு மட்டில் விவாகமாகி ஒரு பெண் குழந்தை பிறந்து, அக் குழந்தை இறந்து, பிறகு, வேறு சந்ததியில்லாமல் அப்பெண்ணும் இறந்துவிட்டாள். அப்பெண்ணுக்குப் புருடனும், உயில் எழுதி வைத்தவருடைய மனைவியும், சகோதரி மகன்களும், இருக்கிறார்கள். *(1)* சொத்துக்கு வார்சு யார்? *(2)* உயில் எழுதி வைத்தவருடைய மனைவி சுவீகாரம் செய்துகொள்ளலாமா? *(3)* கடைசியில் இறந்த பெண்ணின் கணவன் சுவீகாரம் எடுத்துக் கொண்டிருக்கிறார். அச்சுவீகார மகனுக்குச் சொத்து கிடைக்குமா?

பதில்:—உயில் எழுதியவர் இறந்தவுடன் சொத்துக்களில் ஒவ்வொரு பெண்ணுக்கும் சம பாக உரிமை சித்தித்துவிட்டது. அதாவது பெண்கள் மைனர்களாக இருந்தாலும் அவர்களுடைய பாக சொத்தின் சுவாதீனமானது அவரவர் மேஜரான பிறகுதான் கொடுக்கப்பட வேண்டியதாக உயிலில் கண்டிருந்தாலும், அவர்கள் ஒவ்வொரும் அவரவருக்குக் கொடுக்கப்பட்ட சொத்து பாகத்திற்குச் சொந்தக்காரர்களாகிவிட்டனர். ஒவ்வொரு பெண்ணும் இறந்தவுடன் அப்பெண்ணின் வார்சுதான் அவளுடைய சொத்தை அடைவார். கலியாணமாகாமல் இறந்த பெண்களுக்கு தாய்தான் வார்சு. அவர்களுடைய பாக சொத்துக்கள் தாயைத்தான் சேரும். (இந்திய வார்சு உரிமைச் சட்டம் செக்ஷன் *119*—The Succession Act.) கலியாணமாகி இறந்த பெண்ணுக்கு வார்சு அவ

ளுடைய புருடன் சுவீகாரம் எடுத்துக் கொண்ட மகன் தான். இறந்தவருடைய மனைவியும் சுவீகாரம் செய்து கொள்ள லாம். ஆனால் அவள் எடுத்துக் கொண்ட சுவீகார மகனுக்கு மற்ற சொத்துக்களில் ஏதாவது கிடைக்குமா என்பது மிகச் சிக்கலான பிரச்னை.

இந்துச்சட்டம்—உயில்

104. **கேள்வி:** (ராமலிங்கம் — திருத்துறைப் பூண்டி.) பாகப் பிரிவினை ஆகிய இந்து ஒருவர், சந்ததி இல்லாமையால், தம்முடைய சொத்துக்களைத் தம்முடைய வும் தம்முடைய மனைவியினுடையவும் ஜீவதசைக்குப் பிறகு மனைவியின் சகோதரி மகள் சர்வ-சுதந்தர பாத்தியதை யுடன் அடையுமாறு உயில் எழுதி, சாட்சிகளுடன் பூர்த்திசெய்து, உயிலை ரிஜிஸ்டர் செய்யாமல் 1924ல் இறந்து விட்டார். ஆனால் ஷை சொத்துக்களை இறந்தவருடைய மனைவி 1925ல் விற்றுவிட்டாள். அவ்விதம் செய்ய அவளுக்கு உரிமை உண்டா? அவள் 1941ல் இறந்துவிட்டாள். உயில் பாத்தியத்தைக் கொண்டாடி உயில் மூலம் நிலத்தை அடையும் பெண் அந் நிலங்களைத் திரும்ப அடைய முடியுமா?

பதில்:—இறந்தவருடைய மனைவி சொத்துக்களை விற்றாலும் அது அவள் ஆயுளுக்குப்பின் செல்லாது. அவள் இறந்த பிறகு உயில் மூலம் நிலத்தை அடையும் பெண் தாவா செய்து நிலத்தை திரும்ப அடைய உரிமையுள்ளவள். உயில் ரிஜிஸ்டராக வேண்டுமென்பது கட்டாய மில்லை. சட்டப்படி எழுதப்பட்டிருக்கும் உயில் ரிஜிஸ்டராகாவிட்டாலும் செல்லும்.

தஞ்சைச் சட்டம்

105. **கேள்வி:** (நாகராஜன்—பரித்தியூர்.) சமரச அதிகாரியின் உத்தரவில் கண்ட நிலங்களில் சில ஸ்தலங்களை ஒரு வேலிக்கு மேற்பட்ட பட்டாதார், ஒரு வேலிக்கு உட்பட்ட நேரில் சாகுபடி செய்யாத பட்டாதார் ஒருவருக்குக் கிரயம் செய்திருக்கிறார். சமரச அதிகாரியின் உத்தரவுப்படி நிலம் கிடைக்க மேற்கொண்டு என்ன நடவடிக்கை எடுக்கவேண்டும்.

பதில்: சமரச அதிகாரியின் உத்தரவுப்படி அதில் கண்ட நிலம் தம்முடைய சுவாதீனத்தில் கொடுக்கப்பட வேண்டுமென்று தஞ்சைச் சட்ட விதி 17-ன்படி மனுப்போட்டால் ஒரு ரிவின்யூ அதிகாரி, ஸ்தலத்திற்கு வந்து நிலத்தை வசப்படுத்திக் கொடுப்பார்.

புகையிலைச் சட்டம்—சிகரெட் விலை.

106. **கேள்வி:** (மாரிமுத்து—திருத்துறைப் பூண்டி,) சில ஊர்களில் 'வில்ஸ்' சிகரெட் பாக்கெட் அணா 9-ம் சில்லரையில் ஒரு அணாவும் விற்கிறார்கள். பெரும் வியாபாரிகளும் கொள்ளையடிக்கின்றனர். மதராசில் சில்லரையில் 9 தம்படி ஆகத்தான் விற்கிறார்கள். கம்பெனிக்காரரும் இதுவரை பேபரில் விலையை நிர்ணயித்துப் போடவில்லை. ஆகவே என்ன விலை விற்க வேண்டுமென்பதை எழுதினால் கள்ள மார்கெட்காரர்களை ஒழிக்க ஏதுவாக இருக்கும்.

பதில்: இதில் கள்ளமார்கெட் பிரச்னை ஒன்றுமில்லை. எந்த எந்த விலைக்கு விற்க வேண்டிய சிகரெட்டுக்குப் புகையிலை வரி எவ்வளவு என்று புதிய புகையிலைச் சட்டத்தில் இருக்கிறது. அதன்படி முதல் கட்டத்தில் வரி வசூல் செய்து விடுவார்கள். புகையிலைச் சட்டமானது சிகரெட் முதலிய புகையிலைச் சரக்குகளின் உச்ச விலையைக் கட்டுப்படுத்தவுமில்லை; நிர்ணயம் செய்யவுமில்லை. சிகரெட் எந்த விலைக்கு விற்கப் பட்டாலும் அதற்குள்ள வரி விகிதத்தை புகையிலை அதிகாரிகள் நிர்ணயம் செய்து வசூல் செய்து விடுவார்கள்.

பாகப்பிரிவினை—பத்திரம் வேண்டுமா?

107. **கேள்வி:** (தியாகராஜன்—கீழ்வளூர்) பூர்வீக நஞ்சை, புஞ்சை, ஜங்கம சொத்துக்களை (இந்து) சகோதரர்கள் இருவர் சில மத்தியஸ்தர்களைக் கொண்டு 1945ல் பாக பிரிவினை செய்து அது முதல் தனித்தனியே அனுபவித்து வருகிறார்கள். பாகபத்திரம் எழுதி ரிஜிஸ்டர் செய்து கொள்ளவில்லை. அவரவர் பாகத்திற்கு அவரவர் கிஸ்தி செலுத்தி அவரவர் சொத்தைத் தனித்தனியே விற்றும் இருக்

கிறார்கள். ஆனால் பட்டா இன்னும் தனித்தனியாக மாறவில்லை. மூத்த சகோதரர் பேரிலேயேதான் பட்டா இருந்து வருகிறது. பாக பத்திரம் எழுதி ரிஜிஸ்டர் செய்யவேண்டுமென்று கேட்டதற்கு மூத்தவர் காலதாமதம் செய்து வந்தால், ரிஜிஸ்டர் செய்யாமலிருப்பதால் இளையவருடைய சொத்துக்கு ஏதாவது கெடுதி நேரிடுமா? மேற்கொண்டு சட்டபூர்வமாக என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும்?

பதில்: பாகப்பிரிவினைக்குப் பத்திரமே அவசியமில்லை. வாய் மொழியாகவும் பாகம் செய்து கொள்ளலாம். பாகம் செய்து கொண்ட விஷயத்தை ரிவன்யூ அதிகாரிகளுக்குத் தெரிவித்துப் பட்டாவையும் தனித் தனியாக மாற்றிக் கொள்ளலாம். ஆனால் ஸ்தாவர சொத்துக்களைப் பொருத்து பாக பத்திரம் என்று ஒன்று எழுதிக் கொண்டு விட்டால் அது சட்டாயமாக ரிஜிஸ்டராக வேண்டும். ரிஜிஸ்டராகாத பாகபத்திரம் இருந்தால்தான் சில சிக்கலான பிரச்னைகள் தோன்ற இடமுண்டு.

வியாபாரப் பெயர்—அதே விதம் வேறு ஒருவர் பெயர் வைத்தால்.

108. **கேள்வி:** (L. 302) ஒரு ஊரில் ஒரு மருந்துக் கடைக்கு 'வசந்தா மெடிகல் ஹால்' என்று பெயர் வைத்து அப்பெயர் ரிஜிஸ்டர் செய்யப் பட்டிருக்கிறது. அதே ஊரில் மற்றொரு மருந்துக் கடை வேறு ஒருவர் வைத்து 'வசந்தா பார்மஸி' என்று பெயர் வைத்திருக்கிறார். இது ரிஜிஸ்டர் செய்ய வில்லை. அது சட்டப்படி குற்றமாகுமா? முதலில் 'வசந்தா மெடிகல் ஹால்' என்று பெயர் வைத்தவர் வசந்தா பார்மஸி' என்று வைத்திருப்பவர் மீது சட்டப்படி நஷ்ட ஈடு கேட்க சட்டம் உண்டா?

பதில்: 'வசந்தா மெடிகல் ஹால்' என்று வைத்திருப்பவர் இரண்டு விஷயங்களை ருசுப்பிக்க முடியுமானால், அவர் 'வசந்தா பார்மஸிக்காரர் மீது நடவடிக்கை எடுத்து நஷ்ட ஈடு அடைய முடியும். அவையாவன:—

(1) 'வசந்தா பார்மஸி'—என்ற பெயரானது 'வசந்தா மெடிகல் ஹாலை'யே குறிக்கும்படியாக இரண்டு பெயர்களும் அநேகமாக ஒன்றாகவே இருக்கிறதென்று ருசுப்பிக்க வேண்டும். (2) 'வசந்தா மெடிகல்ஹால்' என்ற வார்த்தைக்குப் பொது மக்களிடம் ஒரு இரண்டாவது அர்த்தமும் ஏற்பட்டிருக்க வேண்டும். அதாவது 'வசந்தா மெடிகல்ஹால்' என்ற இடத்தில் வாங்கும் சரக்குகள் இன்னாரிடமிருந்து வாங்கப் படுகின்றவை என்ற நினைப்பு மக்களிடம் பரவி இருக்க வேண்டும்.

இவை இரண்டு விஷயங்களையும் வசந்தா மெடிகல் ஹால்காரர் ருசுப்பிக்க முடியுமானால் தான் அவருக்கு நஷ்ட ஈடு கிடைக்கும். ஒருவருடைய விலாசத்திலுள்ள அதே வார்த்தை ஒன்றை மற்றொருவர் வைத்து வியாபாரம் செய்வதால் மட்டில், யாதொரு நடவடிக்கையும் எடுக்க முடியாது. (61 மதராஸ் லா ஜர்னல் 334 அல்லது 34 லா விக்லி 997—லிருக்கும் பிரிவிகவுன்சில் வழக்கைப் பார்க்கவும்.)

சர்வே ஒரு விதம்—அனுபோகம் ஒரு விதம்

109. **கேள்வி:** (இராமசாமி — மதுரை.) ஒரே ஒரு சர்வே நம்பரில் 1, 2, லெடர்கள் சப்டிவிஷன் செய்யப் பட்டதில் 1 லெடர் 36 செண்டும், 2 லெடர் 1 ஏகருமாக 1916ல் சர்வே நடந்த காலத்தில் ஏற்பட்டிருக்கிறது. ஆனால் 1 லெடர் 32 செண்டும் 2 லெடர் 1 ஏகர் 4 செண்டுமாகத் தான் வரப்புகள் ஏற்பட்டு நாளது வரை 37 வருடங்களாக அனுபவிக்கப் பட்டிருக்கிறது. கிஸ்தி மட்டில் சர்க்கார் கணக்குப்படி கொடுக்கப்பட்டு வருகிறது. இப்போது 1 லெடர்தார், தமக்குக் குறையும் 4 செண்டை 2 லெடர்தாரிடமிருந்து கேட்க உரிமை உண்டா? கோர்டில் 4 செண்டுக்குத் தாவா செய்தால் சட்டம் எப்படி?

பதில்: 2 லெடர்க்காரர் தம்முடையதென்று 12 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக அனுபவித்து வரும் இந்த நான்கு செண்டு நிலமும் அனுபோக

பாத்தியத்தால் அவருக்குச் சொந்தமாகி விட்டது. ஆதியில் இந்த நான்கு செண்டுக்குச் சொந்தக்காரராக இருந்தவர் தம்பாத்தியத்தை இழந்து விட்டார். (காலாவதிச் சட்டம் செக்ஷன் 28.)

போக்கியபத்திரம்—போக்கியதார் பணம் கேட்க ஷரத்து இல்லை.

110. கேள்வி: (L. 310—ராமசாமிகவுண்டர் கொடுமுடி.) போக்கியச் சட்டம் செய்யப்பட்டதற்கு முன்பு 7 வருட கெடுப் போட்டு ஒரு போக்கியப் பத்திரம் எழுதப்பட்டது. இப்போது 7 வருட கெடு முடியப் போகிறது. பத்திரத்தில், போக்கியம் வாங்கியவர் கெடு முடிந்தவுடன் பணம் கேட்க ஷரத்து ஒன்றும் எழுதப்படவில்லை. திருத்தச் சட்டப்படி போக்கியதார் பணம் கேட்க உரிமை உண்டா? 7 வருடத்திற்கு கழிவு செய்து கொண்டு கோர்ட் மூலம் மீதித் தொகையை வசூலிக்க முடியுமா?

பதில்: ஏழு வருட கெடுவில் அசல் தொகையைக் கொடுத்து விடுவதாகப் பத்திரத்தில் ஷரத்து இருந்தாலே போதும். போக்கியக் கடன் கொடுத்தவர் பணம் கேட்க உரிமை உண்டாகி விடும். ஏழு வருட கெடு முடிந்ததும் கழிவுத் தொகை போக பாக்கித் தொகைக்குப் போக்கியதார் தாவா செய்யலாம்.

விவசாயிகள் கடன் நிவாரணச் சட்டம்—ஸ்திரீ கொடுத்த கடன்

111. கேள்வி: (ஜெகன்னாதம்—காளாஸ்திரி.) இந்து ஸ்திரீ ஒருவள் 1948-ல் ஹரிஜன் ஒருவருக்கு ரூ. 100-க்கு மாதம் 1-க்கு ரூ. 1-0-0 வீதம் வட்டி போட்டு நில அடமானத்தின் பேரில் கடன் கொடுத்திருக்கிறாள். விவசாயிகள் கடன் நிவாரணச் சட்டப்படி ரூ. 1-0-0 வட்டியில் கழிவு உண்டா? அல்லது பத்திரத்தில் கண்ட வட்டியே வசூல் செய்ய இடம் உண்டா?

பதில்: வருடம் ஒன்றுக்கு ரூ. 100-க்கு வட்டி ரூ. 5-8-0 தான் கிடைக்கும். (விவசாயிகள் கடன் நிவாரணச் சட்டம் செக்ஷன் 13.) கடன் கொடுத்தவர் ஒரு ஸ்திரீயாக இருப்பதால் சலுகை ஒன்றுமில்லை. ரூ. 6000-க்கு அதிகமான சொத்துக்கள் இல்லாத ஒரு ஸ்திரீக்கு 1-10-1937ல் கிடைக்கவேண்டிய அசல் வட்டித் தொகையில்தான் யாதொரு கழிவும் ஏற்படாது. (விவசாயிகள் கடன் நிவாரணச் சட்டம் செக்ஷன் 4 H.) 1948-ல் கடன் கொடுத்த ஸ்திரீக்குச் சலுகைகள் கிடையாது. கடன் வாங்கியவர் ஹரிஜனாக இருந்தாலும், இல்லாவிட்டாலும் சட்டம் ஒன்றுதான்.

நாட்டுச் செக்குகள்—விற்பனை வரி விதி விலக்கு

112. கேள்வி: (பாலசுப்பிரமணியம்—சிங்கம்புணரி.) சென்னை மாகாண நாட்டுச் செக்குகளுக்கு விற்பனை வரி விதி விலக்கு செய்திருப்பதாக தினசரிப் பத்திரிகைகளில் வெளி வந்திருக்கிறது. இது கெஜட்டில் பிரசுரமாகிவிட்டதா, அல்லது விதி விலக்கு அளிக்க சர்க்கார் முடிவு செய்திருக்கிறார்களா?

பதில்: சர்க்கார் இவர்களுக்கு நிரந்தரமான விதிவிலக்கு அளித்து அது கெஜட்டிலும் பிரசுரமாகிவிட்டது. இந்த இதழ் பக்கம் 11-பார்க்கவும்.

கையெழுத்துப் போடுவதில் மாறுதல்

113. கேள்வி: (பெருமாள் உடையார்—புதுப்பட்டி.) ஒரு நபர் 25 வருடமாகத் தன் பெயரையும் ஜாதியையும் சேர்த்து கையெழுத்துப் போட்டுக்கொண்டு வந்தவர் தற்சமயம் ஜாதியைத் தள்ளிவிட்டு தன் பெயரை மட்டும் கையெழுத்து விலாசம் முதலியவைகளில் போடுவது சட்டப்படி குற்றமாகுமா? உதாரணமாக 'துளசிதாசக் கவுண்டர்' என்பதை 'துளசிதாசன்' என்று எழுதலாமா?

பதில்: அப்படிச் செய்வதில் தவறு ஒன்றுமில்லை. அது குற்றமாகாது.

இந்துச் சட்டம் — அண்ணன் இறந்தால் வார்சு யார்?

114. கேள்வி: (தொரைசாமி — மரிச்சிலம்பு.) அண்ணன் தம்பி இருவருக்கும் (இந்துக்கள்) பொதுவாக நிலம் உள்ளது. அண்ணனுக்கு ஒரு பெண்ணும், தம்பிக்கு இரண்டு ஆண்களும் உண்டு. அண்ணன் தன்னுடைய பெண்ணை ஒரு ஏழைச்கு விவாகம் செய்து, மருமகனையும் பெண்ணை

187723

யும் தன் வீட்டிலேயே வைத்துக் கொண்டார். பெண்ணுக்கு இரண்டு ஆண் குழந்தைகள் இருக்கின்றன. அண்ணன் அவருடைய பாகப்படி நிலத்தைத் தன் மகளுக்குக் கிரயமோ அல்லது உயிலோ எழுதி வைக்காமல் இறந்துவிட்டால் பெண்ணுக்கு நிலம் கிடைக்குமா?

பதில்: அண்ணன் தம்பி இருவர்களுக்கும் பாகப் பிரிவினை ஏற்பட்டிருந்தால், அண்ணன் இறந்த பிறகு அவருடைய பாக சொத்துக்களை அவருடைய பெண், வார்சாக, அடைவாள். அப்பெண்ணின் ஆயுள் வரை அவள் அனுபவித்து, பிறகு பெண்ணின் ஆண் மக்கள் சர்வ சுதந்தர பாத்தியத்துடன் அச்சொத்துக்களை அடைவார்கள்.

ஆனால் அண்ணன் தம்பி இருவரும் ஒரே குடும்பமாக இருந்து பாகப் பிரிவினை ஆகாமலிருந்தால், அண்ணன் இறந்தவுடன் ஜாடா சொத்துக்களும் தம்பியுடைய சொத்தாகி விடும். அண்ணன் பெண்ணுக்கோ, பேரனுக்கோ போகாது.

கதம்பம்

115. கேள்வி: (*சந்தா — 9487*) (1) "பிரும்ம முறை"ப்படி கல்யாணம் என்பது என்ன? (2) "அபிமான புத்திரன்", "சுவீகாரப் புத்திரன்" இரண்டுக்கு முள்ள வித்தியாசம் என்ன? (3) அனுபோக பாத்தியம் என்பது யாரும் எப்பொருளையும் 12 வருடங்கள் அனுபவித்து விட்டால் ஏற்படக்கூடியதா? (4) ஒரு சொத்தைப் "பெயர் இரவலாக" கிரயம் வாங்குவது என்றால் என்ன?

பதில்: (1) மணப் பெண்ணின் பெற்றோர்கள் தங்கள் பெண்ணைக் கொடுப்பதற்காக யாதொரு பிரதிப் பிரயோஜனமும் வாங்கிக் கொள்ளாமல் திருமணம் செய்து கொடுக்கும் முறைக்கு 'பிரும்ம முறை' விவாகம் என்று பெயர். (2) 'சுவீகாரப் புத்திரன்'—என்பது சொந்த மகனைப் போலவே எல்லா விஷயங்களிலும் சொத்து உரிமைகளிலும் பாத்தியமுள்ள, சட்டத்தால் அங்கீகரிக்கப்பட்ட மகனைக் குறிக்கும். 'அபிமான புத்திரன்' என்பது செல்லமாக வளர்க்கப்படும் குழந்தையைக் குறிக்கும் ஒரு அலங்காரச் சொல். 'அபிமான புத்திரன்' என்பவன் சட்டத்தால் அங்கீகரிக்கப்பட்டவனல்ல. உதாரணமாக சுவீகாரம் எடுத்துக்கொண்ட தகப்பன் இறந்தால் அவருடைய சொத்துக்களுக்கு சுவீகார மகன் தான் சட்டப்படி வார்சு. சுவீகாரம் எடுத்துக்கொள்ளாமல் ஒரு குழந்தையை அபிமான புத்திரனாக வளர்க்கும் ஒருவர் இறந்தால், அவருடைய சொத்துக்களுக்கு அபிமான புத்திரன் சட்டப்படி வார்சு ஆகமாட்டான். ஆனால் வளர்ப்பவர் தம் சொத்துக்களைப் பத்திர மூலமாகவோ உயில் மூலமாகவே அபிமான புத்திரனுக்கும் கொடுத்துவிடலாம்; வேறு யாருக்கும் கொடுத்துவிடலாம். (3) யாரும் எந்தப் பொருளையும் 12 வருடங்களுக்கு அனுபவிப்பதால் 'அனுபோக பாத்தியம்' ஏற்பட்டு விடாது. உதாரணமாக நீங்கள் முப்பது வருடங்கள் ஒரு வீட்டில் குடியிருந்து வாடகை கொடுத்து அதை அனுபவித்து வந்தால், அவ்வீடு உங்களுடைய சொத்தாகிவிடாது. (4) ஒரு சொத்தைப் பணம் கொடுத்து வாங்குபவர் அதைத் தன் பெயரால் வாங்காமல், வேறு ஒருவருடைய பெயரில் வாங்கினால், அவர் 'பெயர் இரவலாக' அச்சொத்தை வாங்கியவராவார். உண்மையில் சொத்தானது பெயர் இரவல் கொடுத்தவருடையதல்ல. பணம் கொடுத்து சொத்து வாங்கியவருக்குத்தான் சொத்து சொந்தமாக இருக்கும்.

புரோகர்கள் லைசென்சு வாங்க வேண்டுமா?

116. கேள்வி: (*முஹ்ஸின்—ஆம்பூர்.*) ஸ்தாவர ஜங்கம சொத்துக்களைக் கமிஷனுக்கு விற்பனை செய்யக் கூடிய புரோக்கர்கள் சர்க்காரிடம் லைசென்சு பெற வேண்டுமா? அப்படியானால் யாரிடம் பெறவேண்டும்?

பதில்: ஸ்தாவர சொத்துக்களுக்கு புரோகராக இருக்க யாதொரு லைசென்சும் தேவையில்லை. ஜங்கம சொத்துக்களுக்கு 'கமிஷன்' ஏஜண்டாக இருந்தால் வியாபாரிகளைப் போல் விற்பனை வரிச் சட்டப்படி 'ரிஜிஸ்டர்' செய்துகொள்ள வேண்டும். புதிய புகையிலை வரிச் சட்டப்படி புரோகராக இருந்தாலும் அச் சட்டப்படி ரிஜிஸ்டர் செய்துகொள்ள வேண்டும்.

PRINTED BY N. RAMARATNAM, M.A., B.L., AT THE MADRAS LAW JOURNAL BRANCH PRESS, TIRUVIDAIMARUDUR. AND PUBLISHED BY R. NARASIMHAN, B.A., B.L., AT NO. 73, DABIR WEST STREET, KUMBAKONAM, OF SOUTHERN BOOK HOUSE LTD. *Editor*:—V. S. VIJAYARAGHAVACHARI, B. A., B. L.

தமிழில்
சட்டப் புத்தகங்கள்

"வக்கீல்" பிரசுரங்கள்

"வக்கீல்" 1952-ம் வருடம் ஜனவரி முதல் டிசம்பர் வரை உள்ள இதழ்கள் பொருள் அட்டவணை யுடன் பைண்டு செய்யப் பட்ட செட் ஒன்று விலை ரூ. 5 8 0

"வக்கீல்" 1951-ம் வருடம் பைண்டு செய்யப்பட்ட செட் ஒன்று விலை ரூ. 4 0 0

சென்னை விவசாயிகள் கடன் நிவாரணச் சட்டம் [ஒத்திப் பற்றிய புதிய திருத்தம் உள்பட விளக்கம்] ரூ. 1 4 0

தஞ்சை சாகுபடிதார் பண்ணை யாள் பாதுகாப்புச் சட்டம் [புதிய சட்டம், விதிகள், நமூனக்கள், குத்தகைப் பத்திர நமூன, வார சாகு படிப் பத்திர நமூன உள்பட விளக்கம்] 0 6 0

தபால் சார்ஜ் பிரத்தியேகம்

வி. பி. பி. கிடையாது.

அணு 8 சேர்த்து அனுப்பினல் ரிஜிஸ்டர் தபால் மூலம் அனுப்பப்படும்.

கீழ் கண்ட விலாசத்திற்கு தேவையான பிரதிகளுக்கு M. O. செய்யவும்:—

மானேஜர்,
"வக்கீல்" காரியாலயம்,
தபால் பெட்டி 26 :: கும்பகோணம் (S. I.)

ஸ்டார் புகையிலை கம்பெனி
மார்க்
ஸ்டார் புகையிலை
TRADE MARK
சிவபுரி
புதுக்கோட்டை

சுவைப்பதற்கு
மனோரம்மியமானது

ஸ்டார் புகையிலை கம்பெனி,
உரிமையாளர்கள்:—
மீ.ந.அ.செய்யது இப்ராம்ஸா & சன்ஸ்
தபால்பெட்டி நெ. 20.
புதுக்கோட்டை.

ஸ்தாபிதம் 1909 போன் நெ. 57 தந்தி விலாசம் "கோகுல்"

டி. எஸ். ஆர். & கோ.,

கும்பகோணம்.

REGISTERED TRADE MARK

பிராஞ்சு: (மன்னார்குடி)

கூந்தலுக்கு வளர்ச்சியையும் மூளைக்கு குளிர்ச்சியையும்
கொடுப்பதில் நிகரற்ற
சந்தனாதித்தைலம், அரைக்கீரைவிதைத் தைலம்,
கோகுல் கூந்தல் தைலம்
வாசனைப்பாக்கு, பசுங்காய்கறி ஊறுகாய், ரோஜாப்பூ குல்கந்து, ஊதுவத்திகள்
பன்னீர் இதர வாசனை சாமான்களும் கிடைக்கும்.

Sole Agents:

For Madras
SURAJ AGENCIES
MADRAS

For Coimbatore, Palghat & Nilgiris.
B. BALAPATTABI CHETTIAR,
248, VYSYAL STREET, COIMBATORE.

PRINTED AT THE MADRAS LAW JOURNAL PRESS, TDR,